1

# ஆற்றங்கரையினிலே

## நடந்தாய் வாழி காவேரி!

### காவிரியை நோக்கிக் கோவலன் பாடியது

உழவர் ஓதை மதகு ஓதை
உடைநீர் ஓதை, தண்பதங் கொள்
விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப
நடந்தாய் வாழி காவேரி!
விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப
நடந்த எல்லாம் வாய்காவா
மழவர் ஓதை வளவன் தன்
வளனே வாழி காவேரி!

### காவிரியை நோக்கி மாதவி பாடியது

மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப
மணிப் பூ ஆடை அது போர்த்துக்
கருங்கயல் கண் விழித்து ஒல்கி
நடந்தாய் வாழி காவேரி!
கருங்கயல் கண் விழித்து, ஒல்கி
நடந்த எல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி !
பூவர் சோலை மயில் ஆலப்
புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகு அசைய
நடந்தாய் வாழி காவேரி!
காமர் மாலை அருகு அசைய,
நடந்த எல்லாம் நின் கணவன்
நாம வேலின் திறம் கண்டே
அறிந்தேன் வாழி காவேரி!
வாழி அவன் தன் வளநாடு
மகவாய் வளர்க்கும் தாய் ஆகி,
ஊழி உய்க்கும் பேருதவி
ஒழியாய் வாழி காவேரி!

ஊழி உய்க்கும் பேருதவி
ஒழியாது ஒழுகல் உயிர்ஓம்பும்
ஆழி ஆள்வான் பகல் வெய்யோன்
அருளே வாழி காவேரி!

**– இளங்கோவடிகள்**

# செயல்பாடுகள்

**இசையோடு பாடுதல்**

'மருங்,கு வண்டு சிறந்து ஆர்ப்ப...' எனத் தொடங்கும் பாடலுக்கு ஏற்ற மெட்டமைத்து, இசையோடு குழுவாகவும் தனியாகவும் பாடிப் பழகுங்கள்.

**விமர்சனம் செய்தல்**

இப்பாடப்பகுதியில் உங்கள் மனங்கவர்ந்த பாடல் எது? ஏன்?

**கட்டுரை எழுதுதல்**

பாடப்பகுதியிலுள்ள பாடல்களைப் பகுப்பாய்வு செய்து, காவிரி பாய்ந்து வரும் அழகைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுங்கள்.

**அகர வரிசை : பொருள் எழுதுதல்**

♦ கீழ்வரும் சொற்களை அகரவரிசைப்படுத்தி, அகராதி பார்த்துப் பொருளை எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| ♦ நாமம் | ♦ ஆழி | ♦ ஊழி |
| ♦ விழவர் | ♦ மழவர் | ♦ ஒல்குதல் |
| ♦ மருங்கு | ♦ பதம் | ♦ ஓதை |

**குறிப்பு எழுதுதல்**

பாடப்பகுதியிலுள்ள கவிதைகளில் வந்த அடிகளே திரும்பத் திரும்ப வருகின்றனஅல்லவா?. இவ்வாறு வருவதன் நோக்கம் யாது? கலந்துரையாடி உங்கள் கருத்துகளைத் தொகுத்துக் குறிப்பாக்குங்கள்.

**ஒன்றி வருதல்**

பாடல் வரிகளின் .. முதலில் முதல் எழுத்தும் இரண்டாம் எழுத்தும் ஒன்று போல வரும் சொற்களைத் திரட்டுங்கள்

# இணையத்தில் இரு நதிகள்

சொல்லியழுதால்
சோகம் குறையுமாமே
இணைய மையத்தில்
இணைப்புத் தேடி
தட்டச்சு செய்தாள் காவிரி

அன்புள்ள அக்கா
நலமா?
நான் நலமாக இல்லை
கர்நாடகத்தில்
முறிக்கப்பட்ட என் காலுக்குக்
கல்லணையில்
கட்டுப் போடுகிறார்கள்
நடக்கவே முடியவில்லை

நகரத்துக் கழிவுகள்
இரத்த நாளத்தில் கலந்ததால்
நரம்பெல்லாம் கெட்டுவிட்டதாக
மண் மருத்துவர் சொல்கிறார்

வான அரசின்
கஜானா காலியாம்
வறட்சிப் பாதையில் தான்
நாளும் நடக்கிறேன்
வண்ண மலர்சூடி
வங்க மணாளனைச் சந்தித்த நாட்களெல்லாம்
கனவாய்ப் போய்விட்டன
கவலைகளே வாழ்க்கையாகிவிட்டது
மதுரையிலிருந்து
மின்னஞ்சல் வந்தது ஒடி உழைத்தது போதும்
வி.ஆர்.எஸ். வாங்கிடலாமா
என்று கேட்கிறாள் வைகை

கொஞ்சநாள் பொறுமையாய்
இருக்கச் சொல்லிப்
பதில் அனுப்பி உள்ளேன்

உன்னையும் என்னையும்
இணைக்கப் போவதாய்ப்
பேசப்படுவது காதில் விழுவதுதான்

கடைசி ஆறுதல்
காத்திருக்கிறேன்
கணிப்பொறி மையத்தில்

உன் பதில் பார்த்து

கங்கை . காம்
முகவரிக்கு
மடல் அனுப்பிவிட்டுக்
காத்திருந்தாள் காவிரி
பதில் வந்தது
சில நிமிடங்களில்

காவிரிக்கு
யமுனை பேசுகிறேன்
இனி எல்லாக்
கடிதங்களையும்
என் முகவரிக்கே அனுப்பு

கங்கை
உடல் நிலை சரியில்லாததால்
மருத்துவச் சோதனைக்குச்
சென்றிருக்கிறாள்
வர மாதங்களாகலாம்

உன் கடிதக்
கடைசி ஆறுதல்
எனக்குக் கவலையாக
இருக்கிறது

இங்கேயும் காதில் விழுகிறது
ஆனால்
நம்மையெல்லாம்
ஒன்றிணைக்க
முப்பது ஆண்டுகள்
ஆகுமாம்

அதுவரை
எங்களை மட்டுமாவது
உயிரோடு வைத்திருப்பார்களா?
வனங்களை அழித்து

நம்
வாழ்க்கையைச் சிதைத்த
நன்றி கெட்ட
தன்னல மனிதர்கள்

எனக்கு
நம்பிக்கையில்லை
சந்திப்போம்
அடுத்த மடலில்

மடல் படித்து
மயங்கி விழுந்த
காவிரியின் முகத்தில்
தெளித்துக் கொண்டிருக்கிறார்கள்
மினரல் வாட்டர்!

**- சோம. இராசேந்திரன்**

## செயல்பாடுகள்

### மையக்கருத்து எழுதுதல்

பாடப்பகுதியில் வரும் கவிதையை வாசித்து, அதன் மையக்கருத்தைப் பற்றி கலந்துரையாடி, கண்டறிந்த கருத்துகளைக் குறிப்பாக எழுதுங்கள்.

### இரசனைக்குறிப்பு எழுதுதல்

நகரத்துக் கழிவுகள்
இரத்த நாளத்தில் கலந்ததால்
நரம்பெல்லாம் கெட்டுவிட்டதாக
மண் மருத்துவர் சொல்கிறார்

வான அரசின்
கஜானா காலியாம்
வறட்சிப் பாதையில் தான்
நாளும் நடக்கிறேன்.

- இப்பாடல் வரிகளுக்கு ஏற்ற ஓர் இரசனைக் குறிப்பு எழுதுக. அதில் கவிதையின் பொருள், கற்பனை, உத்தி, அணி, மொழிநடை, கவிதையின் நயம் ஆகியவை இடம் பெற வேண்டும்.

**கருத்து வெளியிடுதல்**

மடல் படித்து
மயங்கி விழுந்த
காவிரியின் முகத்தில்
தெளித்துக் கொண்டிருக்கிறார்கள்
மினரல் வாட்டர்

– இப்பாடல் வரிகளில் கவிஞர் உணர்த்த விரும்பும் கருத்து யாது? கருத்தை வெளிப்படுத்தக் கவிஞர் கையாளும் முறை யாது?

**தலையங்கம் எழுதுதல்**

நதி நீர்ப் பங்கீட்டின் தேவை குறித்துப் பத்திரிகைத் தலையங்கம் எழுதுக.

**முத்திரை வாக்கியம் எழுதுதல்**

ஆறுகள் மாசடைவதால் விளையும் தீமைகளைச் சுட்டிக் காட்டி, பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் , இரண்டு முத்திரை வாக்கியங்கள் எழுதுக.

**வரவேற்புரை எழுதுதல்**

ஆறுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது பற்றிய விழிப்புணர்வு முகாமில் வரவேற்புரை நிகழ்த்துவதற்கான குறிப்பு வரைக.

# அழ முடியவில்லை

நான் பிறந்து வளர்ந்த ஊரை விட்டுச் சென்று நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகியிருக்கும். இப்போது அலுவலக வேலையாகப் பக்கத்து ஊருக்கு வரவேண்டிய ஒரு வாய்ப்பு கிடைத்தது... ஏதோ ஒரு நியோகம் போல. எனக்குள் ஒரே மகிழ்ச்சி. சொந்தபந்தம் கொண்டாட இப்போது ஊரில் யாருமே இல்லை. ஆனாலும் ஊருக்குப் போகவேண்டும் என்னும் ஆர்வம் என்னை உறுத்திக் கொண்டிருந்தது. எல்லாம் எங்கள் ஆற்றைப் பார்க்கவேண்டும் என்ற ஆசைதான்... என் உயிரோடும் உடலோடும் கலந்த எங்கள் ஆறு. பாரதியார் கண்ணனை எப்படியெல்லாம் பார்த்தாரோ அப்படியெல்லாம் நான் எங்கள் ஆற்றைப் பார்த்ததுண்டு. எங்கள் ஆற்றின் பெயரைச் சொன்னாலே மெய் சிலிர்க்கும். அப்படியொரு ஈடுபாடு.

வந்த வேலை முடிந்ததும் சீக்கிரம் சீக்கிரமாகப் பிறந்த ஊருக்குப் புறப்பட்டேன் ஆற்றைப் பார்க்கும் ஆர்வத்தில். குழந்தைக்கால நினைவுகள் நெஞ்சில் அலைமோதின. இரண்டுமணிநேரப் பயணத்திற்குப்பின் ஆற்றின் கரையை அடைந்தேன். ஆவலோடு ஒருமுறை அந்தப் பக்கத்திலிருந்து இந்தப்பக்கம் வரைப் பார்த்தேன். ஆற்றைக் காணவில்லை. அங்கு வேறு ஏதோ ஓடிக்கொண்டிருந்தது. எனக்கு மயக்கம் வருவது போல் இருந்தது. வேண்டியவர்கள் யாரையோ இழந்துவிட்ட உணர்வு. ஊரைவிட்டுச் சென்று ஆண்டுகள் பல ஆகிவிட்டாலும், எனக்குள் அந்த ஆறு வற்றாமல் ஓடிக்கொண்டுதானிருந்தது... அழகான ஒரு குட்டி ஆறு. இனிமேல் இந்தப் புதிய ஆறுதானே என் நினைவுகளில் ஓடத் தொடங்கும்.. அருவருப்பைத் தரும் அசிங்கமான ஆறு ! ஏண்டா வந்தோமென்று ஆயிற்று. ‘பழைய நினைவுகளோடு வாழ்ந்திருக்கலாம்’.. நான் எண்ணினேன்.

படிக்கட்டுகளில் படுத்து உறங்கலாம். அவ்வளவு தூய்மையான படிக்கட்டுகள். இப்போது அந்தப் படித்துறைகள் அசிங்கப்பட்டுக் கிடந்தன. ஒருகாலத்தில் குடிக்கப்பயன்பட்ட ஆற்றுநீர் இப்போது குளிக்கக்கூடப் பயன்படாத நிலையில் தேங்கிக் கிடந்தது. ஓடி ஓடித் தளர்ந்து சோம்பிக் கிடக்கும் நோயாளியைப்போல்.

ஆற்றின் ஒரு பகுதியில் லாரி, ஆட்டோ முதலான வாகனங்களைக் குளிப்பாட்டிக்கொண்டிருந்தனர். வானவில் நீரில் விழுந்தது போல் ஏழு நிறங்களையும் பிரகாசித்துக் கொண்டு ஆற்றில் படர்ந்து கிடந்தது வாகனங்களின் ‘ஆயில்’.

எப்போதோ செத்துப்போன ஆற்றை நினைத்துத் துக்கம் விசாரிக்க வந்தவனைப் போல் பக்கத்தில் நின்ற ஒருவரிடம் பேச்சைக் கொடுத்தேன்.

கொஞ்சம் கூட ஈவு இரக்கமில்லாமே அவ்வளவு மணலையும் அள்ளீட்டுப் போயிட்டான். ஆத்துக்குள்ளே காலை வைக்கமுடியாது. முழங்கால் அளவுக்குச் சேறு தான். மூச்சத் திணறுவது மாதிரி குடியிருப்புக்கள் அதிகமாயிடுச்சு... ட்ரெயினேஜ் வசதி கெடைக்கல்லேண்ணா ஜனங்கதான் என்ன செய்வாங்க.? அத்தனை வீட்டு அசிங்கமும் ஓடை வழியா ஆத்திலதான் கலக்குது. ஆற்றின் இரு கரைகளையும் ஆக்கிரமிச்சு, செடி கொடி மரங்களையெல்லாம் வெட்டிப் போட்டிட்டு குடிசைபோடத் தொடங்கீட்டாங்க. அத்தனை வீட்டுச் சாக்கடைகளையும் ஆறுதான் குடிக்குது. குப்பைக் கூளங்களையும் ஆத்திலதான் கொட்டுவேன்னா என்ன செய்றது! நம்ம வாழவச்ச ஆறு அடுத்த தலைமுறைக்கும் பயன்படணுமிங்கிற எண்ணம் யாருக்குமே இல்லே. அவர் பேசிக் கொண்டே இருந்தார். ஆனால் நான்தான் எங்கெங்கோ சென்று கொண்டிருந்தேன்.

நாகரிக வளர்ச்சியெல்லாம் நதிக்கரையில் தான் முதலில் தொடங்கியது என்பதற்கு எங்கள் ஆறும் ஒரு சிறு சான்றுதான். கோயில் குளங்களும் பள்ளிக்கூடங்களும் கடைத்தெருக்களும் போக்குவரத்து வசதிகளும் இங்குதான் முதலில் வந்ததாகக் கூறுவார்கள்.


எங்கள் ஆறு கங்கையைப் போல் புராணப் பெருமை வாய்ந்ததல்ல; காவிரியைப் போல் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் அல்ல. ஆனாலும் அதற்கும் ஒரு பெருமை இருந்தது. தென்னக மக்களின் பண்பாட்டோடும் வரலாற்றோடும் இரண்டறக்கலந்த அகத்திய முனிவரின் பெயரால் அமைந்த மலையிலிருந்து உற்பத்தியாகி வருகிறது என்ற பெருமை..

ஒரு காலத்தில் எங்களூர் மக்களின் எல்லா தேவைகளுக்குமான தண்ணீரைத் தாராளமாகத் தந்தது இந்த ஆறுதான். அது வெறும் ஒரு ஆறாக இருக்கவில்லை; எங்கள் ஊரின் நாடி நரம்பே அதுதான்.

ஆற்றின் இருமருங்கும் மரம், செடி, கொடிகள் வானோங்கி வளர்ந்து நின்றன. காலைநேரங்களில் ஆற்றுப்பக்கம் சென்றால் ஆற்றின் இரு கரைகளிலும் கொன்றைப்பூக்கள் வரிசையாகக் கிடக்கும். பச்சைப்பட்டுக்குத் தங்க ஜரிகைஇட்டதுபோல். அந்த அழகுக் காட்சியைக் காணும்போதெல்லாம் அன்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் வைகை ஆற்றைப் புகழ்ந்து பாடிய 'புனல் ஆறன்று இது பூம்புனல் ஆறு' என்னும் பாடல்வரிதான் நினைவுக்குவரும்.

ஆங்காங்கே விசாலமான படித்துறைகள். காலில் சலங்கைகட்டி ஓடிவரும் குழந்தையைப் போன்று சல சலவென ஓடிவரும் ஆற்றை எவ்வளவு நேரம் பார்த்துக்கொண்டு நின்றாலும் சலிக்காது. வீட்டில் யாராவது என்னைத் திட்டினாலோ, நான் தனிமைப் படும்போதோ ஆற்றங்கரைக்கு ஓடிவிடுவேன். நீண்ட நேரம் ஆற்றுடன் பேசிக்கொண்டிருப்பேன். அது எனக்குச் சொன்ன கதைகளுக்கு அளவே இல்லை. எல்லாமே மௌன மொழியில் தான். "எவ்வளவுதான் மனக்கவலையும் மன அழுத்தமும் வந்தாலும்

ஆத்தங்கரைக்குப் போய் கொஞ்சநேரம் உக்காந்திருந்தா போதும்... நிமிஷநேரத்தில எல்லாமே போயிரும்". பெரியவர்கள் பலமுறை இப்படிச் சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்போதெல்லாம் எனக்குப் பாலக்காடு சிற்றூரின் பக்கத்தில் ஓடும் நதியின் பெயர்தான் ஞாபகத்திற்கு வரும்... 'சோகநாசினிப்புழை'. சோகநாசினி என்றால் கவலையை நீக்குபவள் என்றுதானே பொருள்! எவ்வளவு பொருத்தமான பெயர்! ஆனால் இப்போது? கவலைகளை நீக்கவந்தவளே கவலைக்கு உள்ளாகும் சோக நிலை.



ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனிக் குளிக்கடவுகள் இருந்தன.. அழகான படிக்கட்டுகள் அமைந்த குளிக்கடவுகள். வண்டிக்காளைகள் முதலான ஆடுமாடுகளையும் இந்த ஆற்றில்தான் குளிப்பாட்டக் கொண்டுவருவார்கள். அதற்கெனத் தனிக்கடவு(துறை) இருந்தது; காளைக்கடவு. சில நேரங்களில் யானைகளையும் குளிப்பாட்டக் கொண்டுவருவார்கள். அப்போதெல்லாம் நாங்கள் சுற்றிநின்று வேடிக்கை பார்ப்போம். சலவைக்காரர்களுக்கு இன்னொரு துறை... அலக்குகடவு. எங்கள் ஊரில் கோயில் கொண்டிருக்கும் மூர்த்தியை ஆண்டிற்கொருமுறை, விழாக்காலத்தில் ஆற்றில் நீராடக் கொண்டுவருவார்கள். அதற்காகவே ஒரு கல்மண்டபமும் அகலமான படித்துறையும் கட்டப் பட்டிருந்தது.. அது ஆறாட்டுக் கடவு என அறியப்பட்டது. அதன் பக்கத்தில் பெரிய ஓர் ஆலமரம். மரத்தின் கீழ் வினாயகர். வினாயகரைச் சுற்றி வட்டமாகச் சின்னச்சின்ன நாகர்சிலைகள். இறந்துபோனவர்களின் அஸ்தியைக் கரைக்கவும் தனிப்பகுதி இருந்தது; அஸ்திக்கடவு.

விடுமுறை நாட்களில் குளிக்கச் சென்றால் கண்கள் சிவக்கும் வரை நீந்திக்குளிப்போம். ஆற்றுக்குள்ளேயே முக்குளிபோட்டுத் தொட்டு விளையாடுவோம். மாறி மாறி முகத்தில் தண்ணீரைத் தெற்றிவிட்டு போட்டிபோடுவோம். யார் தண்ணீருக்குள் அதிகமாக மூச்சுப்பிடித்து மூழ்கி

இருக்கிறார்கள் என்ற போட்டி தினமும் நடைபெறும். ஆற்றின் கரையில் தான் எங்கள் பள்ளிக்கூடம் இருந்தது. இடைவேளை மணி அடிக்கும் போதெல்லாம் ஆற்றைப் பார்க்க ஓடிவிடுவோம். ஆண்டிற்கு ஒன்றிரண்டு முறை பெருமழைக் காலங்களில் எங்கள் ஆறு விஸ்வரூபம் எடுப்பதுண்டு. சிலகாலங்களில் எங்களைத் தேடி பள்ளிக்கூடத்திற்கு உள்ளேயும் வந்துவிடும். இப்போது...? ஒரு சின்னக் கூவமாக , உடம்பெல்லாம் சீழ்வடிய தள்ளாடிக்கொண்டு செல்கிறது. சூரியனையும் சந்திரனையும் மண்ணையும் மலையையும் போன்று ஆறுகளுக்கும் இயற்கை மரணம் இல்லைதான். ஆனால் நாம் அவற்றைக் கொன்றுவிட்டால்...?

ஆங்காங்கே ஆறு மாசுபட்டாலும், எப்போதும் நீரோட்டம் இருந்ததால் தண்ணீர் சுத்தமாகவே இருக்கும்.. ஸ்படிகம்போல். காலையிலும் மாலையிலும் பெண்கள் குடத்தோடு ஆற்றுக்கு வந்துவிடுவார்கள். ஆற்றில் ஆங்காங்கே மணல் திட்டுக்கள் இருந்தன. அந்தத் திட்டுக்களில் குழி தோண்டும் போது நீர் ஊறி வரும். சிறிய பாத்திரத்தால் அந்த நீரைக் கோரி எடுத்துக் குடத்தை நிரப்பிக்கொள்வார்கள். அதுதான் அன்றைக்கு எங்களுக்கு 'மினரல் வாட்டர்'. எங்கள் ஊரிலிருந்து ஆறுகல் தொலைவில் தான் திருவிதாங்கூர் மன்னரின் அரண்மனை இருந்தது. கொட்டாரத்திலிருந்து தினந்தோறும் சேவகர்கள் வரிசையாக வந்து பெரிய பெரிய குடங்களில் இந்த ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்வார்களாம்... அரண்மனைத் தேவைகளுக்காகவும் அரச குடும்பத்தினருக்குக் குடிப்பதற்காகவும். இந்தக் காட்சி 'மார்த்தாண்டவர்மா' என்னும் நாவலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதனை எங்கள் ஆற்றின் பெருமைக்கான சான்றிதழாகக் காட்டிக் கொள்வோம்.

எப்போதாவது ஜலதோஷம் பிடித்தால் பாட்டி சொல்வாள், "டேய் குளிக்கப் போகும் போது ஆத்தில ஒரு முங்குமுங்கி ஒருவாய் தண்ணிய குடி. சலதோஷம் பறந்தே போயிரும்" என்று.

அந்தப் பாட்டி வைத்தியத்தின் ரகசியம் இப்போதும் எனக்குத் தெரியாது. ஆனாலும் அது பலனளித்தது என்பது உண்மை.

என்மீது அளவுகடந்த பாசம் காட்டி அன்போடு வளர்த்தவள் எங்கள் பாட்டி. கடைசிக் காலத்தில் உடம்பெல்லாம் சுருங்கி, எல்லும் தோலுமாகப் படுத்த படுக்கையாகக் கிடந்துவிட்டாள் பாட்டி.. என்னைப் பார்க்கும்போதெல்லாம் ஏதேதோ பேச நினைப்பாள். ஆனால் பேச்சு வராது. அப்படியொரு நிலையில் பாட்டியைப் பார்த்து நான் ஏங்கி ஏங்கி அழுததுண்டு.

இப்போது இந்த ஆற்றையும் அதே அவஸ்தையில் பார்க்கின்றேன். ஆனால் அழமட்டும் என்னால் முடியவில்லை.

**- முனைவர் மா. நயினார்**

# செயல்பாடுகள்

**சிறுகுறிப்பு வரைதல்**

"எவ்வளவுதான் மனக்கவலையும் மனஅழுத்தமும் வந்தாலும் ஆத்தங்கரைக்குப் போய் கொஞ்ச நேரம் உக்காந்திருந்தா போதும். நிமிஷ நேரத்தில் எல்லாமே போயிரும்". பெரியவர்கள் பலமுறை இப்படிச் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் இப்போது?" என்று ஆசிரியர் ஆற்றின் நிலை குறித்து ஆதங்கத்துடன் கூறக் காரணமென்ன? பழைய ஆற்றின் மீது ஆசிரியர் கொண்டிருந்த பற்றையும் இன்றைய ஆற்றின் நிலைகுறித்த ஆதங்கத்தையும் குறித்துச் சிறுகுறிப்பு வரைக.

**விமர்சனக்கட்டுரை எழுதுதல்**

'புனல் ஆறு அன்று இது பூம்புனல் ஆறு' என வைகை ஆறுபோல காட்சி தந்த அதே ஆறு இன்று. அருவருப்பைத் தரும் அசிங்கமான ஆறாக மாறுவதற்கான காரணங்கள் யாவை, என்பதனை விமர்சித்துக் கட்டுரையொன்று எழுதுக.

**கவிதை எழுதுதல்**

"மக்கள் வாழ்விலும் பண்பாட்டிலும் ஆறு" என்னும் கருத்தின் அடிப்படையில் கவிதை எழுதுக.

**நினைவுக்குறிப்பு எழுதுதல்**

உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சி ஒன்றை நினைவு கூர்ந்து நினைவுக்குறிப்பாக எழுதுங்கள்.

**துண்டுப்பிரசுரம் உருவாக்குதல்**

'ஆறுகளின் அழிவு மனித வாழ்க்கையைப் பாதிக்கிறது' எனும் கருத்தை வலியுறுத்தி, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் விதத்தில் துண்டுப்பிரசுரம் உருவாக்குங்கள்.

**பிறமொழிச் சொற்கள்**


இப்பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள வட்டார வழக்குச் சொற்களையும் வடமொழிச் சொற்களையும், பிறமொழிச் சொற்களையும் எடுத்தெழுதுங்கள். அவற்றுக்கு இணையான தமிழ்ச்சொற்களையும் எழுதுங்கள்.

**தன்வரலாறு கட்டுரை எழுதுதல்**

ஆறு தன் அனுபவங்களைக் கூறுவதைப் போன்று தன்வரலாற்றுக் கட்டுரையொன்று எழுதுக.

## 2

# அசலும் நகலும்



உழவர்க்கு அழகு ஏர் உழுதூண் விரும்பல்
உண்டிக்கு அழகு விருந்தொடு உண்டல்
அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்
செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்

**– வெற்றி வேற்கை**

குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு

**– நாலடியார்**

இப்பாடல்கள் உணர்த்தும் கருத்துகள் குறித்துக் கலந்துரையாடுங்கள். உங்கள் கருத்தை எழுதுங்கள்.

# அலங்காரம்

கொடிகள் சொந்தப் பூக்களால்
தம்மை அலங்கரித்துக் கொள்கின்றன
மனிதன் தன்னை அலங்கரித்துக் கொள்ளப்
பூக்களை விலைக்கு வாங்குகிறான்

வானம் சொந்த நட்சத்திரங்களால்
தன்னை அலங்கரித்துக் கொள்கிறது
மனிதன் தன்னை அலங்கரித்துக் கொள்ள
பூமியிடமிருந்து நவரத்தினங்களைத் திருடுகிறான்

நீ சுயமரியாதை உடையவனாக இருந்தால்
உன் ஆடை அணிகளை
உன்னிலிருந்தே உருவாக்கு

உன் தலையைப் புகழால் அலங்கரி
மகுடங்களால் அலங்கரிக்காதே
ஏனென்றால்
மகுடங்கள் தலை மாறக் கூடியவை



உன் நெற்றியைச் சிந்தனையால் அலங்கரி
திலகத்தால் அலங்கரிக்காதே
ஏனென்றால்
திலகம் கலையக் கூடியது

உன் கண்களை
இரக்கக் கண்ணீரால் அலங்கரி
மையினால் அலங்கரிக்காதே
ஏனென்றால்
மை கரையக்கூடியது

உன் செவிகளைக் கேள்வியால் அலங்கரி
தோடுகளால் அலங்கரிக்காதே
ஏனென்றால்
தோடுகள் திருடு போகக் கூடியவை

உன் உதடுகளை உண்மையால் அலங்கரி
சாயத்தால் அலங்கரிக்காதே
ஏனென்றால்
சாயம் வெளுத்துப் போகக் கூடியது

உன் தோள்களை வீரத்தால் அலங்கரி
மாலைகளால் அலங்கரிக்காதே
ஏனென்றால்
மாலைகள் வாடக் கூடியவை

உன் கைகளை ஈகையால் அலங்கரி
மருதாணியால் அலங்கரிக்காதே
ஏனென்றால்
மருதாணி மறையக் கூடியது

நீ உன்னை உன்னால் அலங்கரி
பொன்னால் அலங்கரிக்காதே
ஏனென்றால்
பொன்னை விட மனிதனின் சுயம்
மதிப்புடையது

நிலவுக்கு எதற்கு அரிதாரம்?

வானவில்லுக்கு எதற்கு வர்ணப்பூச்சு?

கண்ணுக்கு அழகாக இருப்பவர்களைக்
காலம் சிதைத்து விடுகிறது
காதுக்கு அழகாக இருப்பவர்கள்
மரணத்தையும்
அலங்காரமாக்கிக் கொள்கிறார்கள்.

**- கவிஞர் அப்துல் ரகுமான்**

## செயல்பாடுகள்

### கருத்து எழுதுதல்

"கண்ணுக்கு அழகாக இருப்பவர்களைக்
காலம் சிதைத்து விடுகிறது
காதுக்கு அழகாக இருப்பவர்கள்
மரணத்தையும்
அலங்காரமாக்கிக் கொள்கிறார்கள்".

என்ற வரிகளால் கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.

### விமர்சனக் குறிப்பு எழுதுதல்

இன்றைய மக்கள் புற அழகில் ஆர்வம் காட்டுகிறார்கள் என்ற கூற்றை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? விமர்சனக் குறிப்பு எழுதுக.

**விமர்சனக் கட்டுரை**

அழகு தொடர்பான விளம்பரங்களைச் சேகரியுங்கள். அவ்விளம்பரத்தின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து உங்கள் விமர்சனக் கருத்தைத் தருக.

**கவியரங்கம் நடத்துதல்**

அழகு தொடர்பான கவிதைகளைச் சேகரித்து, அவற்றை அக அழகு, புற அழகு என வேறுபடுத்தித் தமிழ்க் கவிதைகளில் அக அழகு, புறஅழகு எனும் தலைப்புகளில் கவியரங்கம் நடத்துங்கள்

**பட்டிமன்றம் நடத்துதல்**

'மனித வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாதது உடல் அழகா?' உள்ள அழகா? எனும் தலைப்பில் பட்டிமன்றம் நிகழ்த்துங்கள்.

# அழகுக்கு அழகு

உலகம் ஒற்றுமையாக வாழ்வதற்குச் சில பண்புகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர். அப்பண்புகளுக்கெல்லாம் தலையாய பண்பாக விளங்குவது ‘ அன்பு’ என்னும் பண்பேயாகும். அன்பு இல்லை எனில், பெற்றோர்களிடத்துப் பிள்ளைகளோ, கணவனிடத்து மனைவியோ ஆசிரியர்களிடத்து மாணவர்களோ அரசனிடத்துக் குடிமக்களோ பொருந்திக் கலந்து வாழ இயலாதென்பது உறுதி. ‘அன்பில்லாதவர்களை மக்கள் என்றுகூடச் சொல்ல இயலாது. அவர்கள் எலும்பின் மீது தோலைப் போர்த்து வைத்ததோர் பதுமை போன்றவரே யாவார்’ என்று இழித்துரைக்கின்றார் திருவள்ளுவப் பெருந்தகை.

## பிசிராந்தையார்

கலைவளனும் கல்விச்சிறப்பும் ஒருங்கே அமைந்த பாண்டிய நாட்டில் , சான்றோர் பெருமக்களைத் தன்னகத்தே கொண்டதும், ஈந்துவக்கும் இன்றமிழ்ச் செல்வர்கள் நிறைந்ததுமாகிய ‘பிசிர்’ என்னும் சிற்றூர் ஒன்றிருந்தது. அவ்வூரில் தான் அறிவுடைப் பெருமக்கள் பலருள்ளும் பெருமை பெற்று விளங்கிய பிசிராந்தையார் தோன்றினர். ஆதன் தந்தை ‘ஆந்தை’என்னும் இயற்பெயரோடு அக்கால முறைப்படி, ஊர்ப் பெயரையும் சேர்த்துப் ‘பிசிராந்தையார்’ என்று சிறப்புற இவரை அழைத்தனர்.

## இளமைப்பருவம்

பிசிராந்தையார் இளமையிலேயே கற்பன கற்று, கற்றவழி நின்று, அறிஞர் பலரும் போற்றும் வண்ணம் வாழ்ந்தார். அரும்பெருங்கலைகளை ஐயந்திரிபறக் கற்றதோடன்றிக் கவிபாடும் ஆற்றலும் பெற்று விளங்கினார். பிசிராந்தையாரின் பெற்றோர்கள் அன்பும் பண்பும் கொண்ட ஒரு பெண்ணை அவருக்கு மணமுடித்துப் பெருமகிழ்வெய்தினர்.

## ஆந்தையாரும் அவர்தம் இல்லறமும்

பிசிராந்தையார் தம் மனையாளுடன் இல்லறமென்னும் நல்லறத்தைச் சிறப்பான முறையில் நடத்தினார். அவர்தம் மனைவியாக வாய்த்த அம்மையார் ‘வாழ்க்கைத்துணை’ என்ற நிலைக்கேற்பச் சிறந்து விளங்கினார்கள். ‘தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்’ என்னும் பொதுமறையின் வாக்கிற்கேற்ப வாழ்ந்ததனால் அவருடைய வாழ்வு வளமும் பொலிவும்பெற்று விளங்கியது.

## ஆந்தையாரும் மக்கட்பேறும்

இல்லறமென்னும் நல்லறவாழ்வை இனிது நடத்திய அவரது குடும்பத்தில் இன்பம் பெருகிற்று. குடும்பத்திற்கு மங்கலமளிப்பது மக்கட் செல்வமேயாகும். மனையறத்தின் சிறப்பு, பெரும் செல்வம் பெற்றிருப்பினும், மகப்பேறு

இல்லையெனில் பயனற்றதாகும். பொன்னுடையரேனும், புகழுடையரேனும் மக்கட்செல்வம் பெறாதார் வாழ்க்கை பயனற்றதேயாகும். பிசிராந்தையாரது வாழ்வில் மாண்புடைய மனைவி, மதியுடைய மக்கள், குறிப்பறிந்து குற்றேவல் செய்யும் ஏவலர், கற்றறிந்த சான்றோர்களின் நட்பு ஆகியன நிறைந்து புலவரின் வாழ்வு பெருமகிழ்வு பெற்றதாயிருந்தது. அதனால் அவர் நரை, திரை, மூப்பு. பிணி ஆகியன இன்றி இனிமையுடன் வாழ்ந்து வந்தார்.

## கோப்பெருஞ்சோழன்

தம் புலமைத் திறத்தால், நல்லோர் பலரும் போற்றும் வண்ணம் பிசிராந்தையார் பாண்டி மண்டலத்தில் வாழ்ந்து வந்தார். ஒருகால் புலவர் சிலர், உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டை ஆண்டுவந்த கோப்பெருஞ் சோழனைப் பற்றிச் சிறப்பாகப் பேசினார்கள். அதைச் செவிமடுத்தார் புலவர். மாநிலங் காக்கும் மன்னனுடைய ஆட்சி முறையையும், தமிழ்ப் பற்றையும் கேட்டு பெருஞ் சோழனது புகழ் வாய்ந்த நற்செயல்கள் அன்பு கொள்ளச் செய்தன. அவருள்ளத்தில் கோப்பெருஞ்சோழன்பால் மிகுந்த அன்புணர்வு தோன்றியது. அது நாளடைவில் உழுவலன்பு, கெழுமிய நட்பாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரத் தொடங்கியது.

## சோழ மன்னனின் அன்பு

சோழவள நாட்டின் மன்னனான கோப்பெருஞ்சோழனிடத்துப் புலவர் பெருமானுக்கு உண்டான நட்பினைப் போலவே, கோப்பெருஞ் சோழனுக்கும், பிசிராந்தையார் பால் நட்பு உண்டாகியது. புலவர் பலரால் பிசிராந்தையாரின் உயர்குணச் சிறப்பினைக் கேள்வியுற்றான் சோழன். பாண்டிய நாட்டின் ஆட்சியின் சிறப்பிற்குக் காரணமாக விளங்குபவர், பாண்டி நாட்டுப் பழம்பதியில் வாழும் பிசிராந்தையாராவார் என்ற செய்தி கோப்பெருஞ்சோழனுடைய செவிக்கு எட்டியது. சோழன் பிசிராந்தையாரிடத்துப் பெருமதிப்புக் கொண்டான். அம்மதிப்பு நாளாக நாளாக உயர்ந்த நட்பாக விளங்கியது. சோணாட்டு மன்னன் கோப்பெருஞ்சோழனும், பாண்டி நாட்டுப் புலவர் பிசிராந்தையாரும் ஒருவரையொருவர் காணாமலேயே கவின்பெரு நட்புக் கொண்டனர்.

ஒருவரோடு ஒருவர் கூடிப் பிறப்பதாலும், பழகுவதனாலும் உண்டாகும் நட்பை விட, ஒத்த உணர்ச்சியால் தோன்றும் நட்பே சிறந்ததாகும் என்ற திருக்குறளின் கருத்துக்கு, இவ்விருவரது நட்பும் உதாரணமாக விளங்கியது.

ஒரு நாள் மாலை வேளை முழுமதி தன்னுடைய ஒளி முகத்தைக் காட்டி வான வீதியிலே உலாவுகின்றது. அப்போது கற்பனையின் கருவூலமாகத் திகழும் புலவர் பெருந்தகை, வானை நோக்கி ஏதோ நினைத்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அன்னச் சேவல் ஒன்று வான வீதியிலே அவ்வழியே சென்றது. தென் திசையிலிருந்து வடதிசை நோக்கிச் செல்லும் அவ்வன்னச் சேவலைக் கண்டவுடனே அவருடைய உள்ளத்தில் உணர்ச்சிப் பெருக்கெடுத்தது.

அவ்வுணர்ச்சிப் பெருக்கை ஒரு சொல்லோவியமாக வடித்தெடுத்துக் கொடுத்தார் புலவர் பெருந்தகை பிசிராந்தையார். அதன் கருத்துப் பின்வருவமாறு: 'அன்னச் சேவலே! நீ தென் திசையிலுள்ள குமரியில் நீராடி, அங்குள்ள அயிரை என்னும் மீனைச் சுவைத்து விட்டு வடதிசை நோக்கிச் செல்லுகின்றாய். செல்லுகின்ற வழியில் சோழ நாடு என்ற ஒரு நாடு இருக்கின்றது. அந்நாட்டின் கண் சென்று, நீதியும் நேர்மையும் தவறாத கோப்பெருஞ்சோழன் என்னும் மன்னனுடைய அரண்மனைக்கண் சென்று, அம்மன்னனிடம் நான் பிசிராந்தையாரின் அன்பிற்குரியேன் என்று கூறுவாயாயின் உடனே அவன் உள்ளம் மகிழ்ந்து நீயும் நின்பெடை அன்னமும் அணியத்தகும் வகையில் சிறந்த அணிகலன்களைத் தருவான்' என்று தம்மிடத்துக் கோப்பெருஞ் சோழன் கொண்டிருந்த ஒப்புயர்வற்ற அன்பினை விளக்கிக் கூறினார். இதனால் புலவரும் புரவலனும் கொண்டிருந்த சீரிய நட்பினை ஒருவாறு உணரலாம்.

'மருந்தோ மற்றூனோம்பும் வாழ்க்கைப் பெருந்தகைமை பீடழிய வந்த விடத்து' என்ற அருமறையைக் கோப்பெருஞ்சோழன் எண்ணினான்; வடக்கிருக்கத் துணிந்தான். இதனைக் கேட்ட புலவர்களும் பிறரும் வாடிய மனத்துடன் வள்ளலை நெருங்கினர். 'ஐய! தாங்களா இத்தகைய முடிவு கொண்டீர்கள்? இல்லையென்று வந்தவர்க்கெல்லாம் இல்லையென்னாது வாரி வழங்கிய நும்மை யாண்டுக் காணப்போகின்றோம்? அறிவும் திருவும் ஒருங்கே பெற்றுத் தம் நாட்டு மக்களைக் கண்ணெனக் காத்துப் போற்றிய தங்களைப் போல இனி யாரைக் காணப்போகின்றோம்? உம்மைப் போன்ற அருளாளர்களை இனியாண்டுக் காண்போம்?' என்று, தம் உள்ளத்தில் தோன்றிய குமுறல்களைச் செந்தமிழ்ப் பாட்டாகத் தந்தனர்; 'இம் முடிவை மாற்றிக் கொள்ளுங்கள் என்று வேண்டினர். எனினும் மன்னனுடைய மனம் மாறவில்லை. தான் கொண்ட உறுதியினின்றும் சிறிதும் தளர்ந்தானில்லை கோப்பெருஞ்சோழன். வடக்கிருக்க நாளும் இடமும் குறிக்கப் பெற்றன. மன்னனை விட்டுப் பிரிய மனமில்லாத சான்றோர் பலர் தாமும் கோப்பெருஞ்சோழனோடு வடக்கிருந்து இறக்கத் துணிந்தனர். எல்லோருக்கும் இடம் அமைக்கப்பட்டது. அப்போது மன்னன் அண்மையிலுள்ளோரை நோக்கி, "என்னுடைய ஆருயிர் நண்பரான பாண்டிய நாட்டுப் பிசிராந்தையார் இங்கு வருவார். அவருக்கும் ஓர் இடம் ஒதுக்கி வையுங்கள்" என்று கூறினான். அதைக் கேட்டவர்கள் மன்னனைப் பார்த்து, "தாங்கள் அவரோடு ஒரு நாள் ஒருமுறையேனும் கண்டு உரையாடியது இல்லையே! அவ்வாறிருக்க அவர் இப்போது வருவார் என்பதனை எங்ஙனம் உறுதி செய்ய இயலும்? பல நாள் பழகிப் பல பயன் பெற்றவரும், அல்லற் காலத்து அருகில் வாரார் என்பது உலகம் அறிந்த செய்தியாயிற்றே. அங்ஙனமிருக்க வடக்கிருந்து உயிர் துறத்தலாகிய இந்நிலையில் நம்மொடு உடன் உயிர் துறக்க வருவார் என்பதை நம்புதல் எங்ஙனம்?" என்று இயம்பினர். அது கேட்ட சோழன், "யான் சோணாட்டு மன்னனாக விளங்கி மாண்புடைப் பெரியோர்களுக்கு வழங்கிய காலத்தில் அவர் வராமற் போனாலும் எனக்கு இறுதிநிலையுற்ற இக்காலை வாராமல் இரார். எங்கள் இருவருக்குமுள்ள நட்பு, உழுவலன்பு கெழுமிய நட்பு; ஏழு பிறவிகளிலும் தொடர்ந்து வருகிற நட்பு. தம்

பெயரைக் கூறும் போதெல்லாம், என் பெயர் சோழன் என்றே கூறுபவர் அப்பெருந்தகை. அத்தகைய உயிர் நட்புடைய புலவர் நிச்சயமாக இங்கு **YÚYôo**" என்று கூறினான்.

**Uu]oá±V YÝYt\ ùNôtLs Ei ûUVô« ]. SôYuûU ªdL SôYXoLÞ m TôYuûU«t £\kR TôYXoLÞ m ®VdÏm Yi Q m ©£WôkûRVôo A eÏ YkRôo. A YûWdLi PÕm úLôlùTÚgú NôZà m, Hû]V ×XYoLÞ m,©\Úm A û PkR ® Vl×dÏ A [úY«pûX.**

**YôrSôs ØÝYÕm JÚYûW ùVôÚYo LôQ ôR EVo Sh© ]o CÚYÚm,YôrkÕ Ø¥kR LôXj§p Juß úNokR] o.ûTkRªrl ×XYÚm, ùNkRªrl ×WYXÚm CqÜXLm ¨ûXVôûUûV EûPVÕ Gu\ át±tÏ GÓjÕd LôhPôL ¨u\] o. A Ú¡-ÚkR ×XYoLÞ m Hû]V ùTÚUdLÞ m A û PkR Õu Tj§tÏ GpûXÙi úPô?**

**A u© ]ôp Juß LXkR úLôlùTÚgúNôZu ©£WôkûRVôo B ¡úVôÚûPV EVokR Sh× EXLØs[[Üm úTôt±l×LÝ m ShTuú\ô!**

> 'அழிவின் அவை நீக்கி ஆறுய்த் தழிவின்கண்
> அல்லல் உழப்பதாம் நட்பு'.

என்ற உலகப் பொதுமறை, கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் கொண்ட நட்பை எடுத்துக் காட்டுவதைப் போன்று அமைந்துள்ளது.

## செயல்பாடுகள்

### கருத்தும் பொருத்தமும்

> புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சி தான்
> நட்பாம் கிழமை தரும்

– இக்குறளின் கருத்து பிசிராந்தையார் – கோப்பெருஞ்சோழன் நட்பிற்குப் பொருந்துவதைத் தெளிவு செய்க.

### நிகழ்ச்சித் தொகுப்பு எழுதுதல்

மன அழகு என்று கருதப்படும் அன்பு, இரக்கம், கொடை – இவைபற்றி இலக்கியங்களில் இடம் பெறும் நிகழ்ச்சிகளைத் தருக.

**அட்டவணையை நிரப்புக**

| **இலக்கிய மாந்தர்கள்** | **சிறப்பு** |
|---|---|
| ■ கர்ணன் | கொடை |
| ■ | அன்பு |
| ■ | இரக்கம் |
| ■ | நீதி |
| ■ | வாய்மை |

**சுவரொட்டி தயார் செய்தல்**

உங்களது பள்ளி இலக்கிய மன்றத்தில் நடைபெறும் ‘ உனக்கும் வாழ்வு வரும்’ என்னும் நாடகத்திற்கு ஒரு சுவரொட்டி தயார் செய்க.

**கட்டுரை எழுதுதல்**

“உளநலந்தான் உடல்நலத்திற்குக் காரணம்” என்பது பற்றி விவாதித்து முடிவுகளைத் தொகுத்து வரைக.

**ஒரே வாக்கியமாக மாற்றுதல்**

- ♦ இராமனும் கண்ணனும் நேற்றுவரை பகைவர்களாக இருந்தனர். இன்று நெருங்கிய நண்பர்களாயினர்.
- ♦ கம்பர் இராமாயணத்தை இயற்றினார். ஏர் எழுபது என்னும் நூலையும் படைத்தார்.
- ♦ கண்ணன் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு ஓடி வந்தான். அவன் கடைவீதிக்குச் சென்றான்.
- ♦ பெண்ணுக்கு மதிப்பு கொடுங்கள்; உரிமை கொடுங்கள். இனிது நடத்துங்கள்.

**திருப்பிப்போட்டால்......**

தாமரை முகம் என்றால் தாமரை போன்ற முகம் என்று பொருள். அதையே முகத்தாமரை என்று திருப்பிப் போட்டால் தாமரை ஆகிய முகம் என்று பொருள் படும். அதாவது முகம் தாமரையாகவே மாறிவிட்டது என்று பொருள். இதைப் போல வரும் வேறு சொற்கள் சிலவற்றை மாற்றி எழுதுங்கள்.

- ♦ கைமலர்
- ♦ முகத்தாமரை
- ♦
- ♦

# உடற்செல்வம்

நல்வாழ்வுக்கு இன்றியமையாதது உடல் நலம். உடம்பைப் பெற்ற மக்கள் அதைப் பாதுகாக்க வேண்டுமென்பது அறிவைப் பெற்றவர்களின் கருத்து. 'நோய் வராமல் தடுப்பவன் அறிஞன்; வந்த பின் தடுப்பவன் மனிதன்; வந்தும் தடுக்காதவன் பிணம்' என்பது புதுமொழி. மக்கள் முயன்றால் நோய் வராமல் தடுத்து வாழ முடியும். அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது ஒன்று: உண்ணும் உணவிலும் உடலின் உழைப்பிலும்,சிறிது கருத்தைச் செலுத்துவதுதான்.

பனி அதிகமாக இருந்தால் வெளியில் தலை நீட்டாதே என்று புத்திமதி சொல்லும் பெற்றோரைப் பார்த்திருப்பீர்கள். ஏன்? பனி என்றால் அவ்வளவு பொல்லாததா? அல்லது பயங்கரமானதா? ஒன்றுமில்லை. நன்றாகப் பனியில் திரியலாம்; மழையிலும் நனையலாம்; காற்றிலும் அடிபடலாம். ஆனால், ஒன்று: நீங்கள் வெயிலிலும் காய்ந்திருக்க வேண்டும். நாள்தோறும் ஒரு மணி நேரம் வெயிலைத் தாங்கும் உடம்பு ஒரு மணி நேரப் பனியையும் ஒரு மணி நேர மழையையும் தாங்கும். வெயில் படாத குழந்தைகளின் உடம்பில் மழைத்துளியும், பனித்துளியும் படக்கூடாது. பட்டால் உடல் நலம் இளமையிலேயே இடிந்து குட்டிச்சுவராகிப் பிறகு மண்ணாகி, மறைவாகிப் போய்விடும்.

வெயிலில் நாள் தோறும் அலைகின்ற மக்களின் உடலைக் காற்றும் மழையும் கடும்பனியும் வளர்த்து வருகின்றன. இவ்வுண்மையைக் கிராம மக்களிடத்தே காணலாம். கடும் வெயிலிற் காடுதிருத்தி மண்வெட்டி, உழுது, உண்டு வாழும் ஆண் மக்களும், பிள்ளையைப் பெற்ற அன்றே சேற்றில் இறங்கி நாற்று நடும் பெண் மக்களும், ஆடையும் அரை ஞாணுமின்றி ஓடி விளையாடும் குழந்தைகளும் தங்கள் உடற் செல்வத்தை நகர மக்களுக்கு நன்கு காட்டி வருகிறார்கள்.

வெயில், மழை, பனி, காற்று ஆகிய நான்கும் மக்கள் உடலுக்கு உறுதி செய்யும் இயற்கைச் செல்வங்கள். இவற்றுள் வெயிலை விலக்கி மூன்றை மட்டும் ஏற்றால் உடல் நலம் கெடாமல் என்ன செய்யும்? மனிதன் ஒருவனே மலைபோன்ற இத்தவறுதலைச் செய்கிறான். விலங்குகளும், பறவைகளும் இத்தவறைச் செய்வதில்லை. அவை நான்கையும் பயன் படுத்திக் கொண்டு உடற்செல்வத்தைப் பாதுகாத்து வருகின்றன.


அதனால், அவர்கள் விரும்பியதெல்லாம் உண்கிறார்கள். வேண்டிய அளவு உண்கிறார்கள். உண்பது செரிக்க உழைப்பது துணை செய்கிறது என்பதை உழைப்பாளிகளாகிய கிராம மக்களிடத்தில் தான் காணமுடிகிறது. உழைக்காது உண்ணுகின்ற மக்கள் நகர வாழ்வில் பலருண்டு. அவர்கள், எதை உண்ணலாம்? எவ்வளவு உண்ணலாம்? என ஆங்கில மருத்துவர்களிடம் தேடிச் சென்று கேட்பதும், அவர் துருவித் துருவி ஆராய்ந்து பார்த்து, எடையில் நிறுத்து,

கால்வாசி உணவை அரைவாசி வேகவைத்து, செரிக்கும் மருந்துடன் சேர்த்து உண்ணச் செய்வது வழக்கமாகப் போயிற்று.

செரிக்கும் மருந்துடன் உணவும் சேர்ந்து மனிதன் வயிற்றில் போனால்தானா செரிக்கும்? உயிரற்ற இயந்திரத்தில் போய்ச் சேர்ந்தாலும் செரித்து விடும் என்பதைஇப்போது எவரும் நன்கு அறியலாம். உழைப்பு ஒன்றே உணவைச் செரிக்கச் செய்யும் மருந்து என்பதை உடற் செல்வம் விரும்பும் மக்கள் அனைவரும் உணர வேண்டும். உழைத்து உண்ணாத எவரும் உடற் செல்வத்தைப் பெற முடியாது என்பது முடிவு கட்டப்பெற்ற முடிவாகும்.

பொருட் செல்வம் தேட முயற்சி தேவை; உடற்செல்வம் தேடப் பயிற்சி தேவை.. உடற் பயிற்சியின்றி உடற்செல்வத்தையும் பெறமுடியாது. உடற்பயிற்சி என்றதும் தண்டால், கரிலாக்கட்டை, எடைக்குண்டு, கைக்குண்டு, முதலியவைகளை நினைத்துக் கொள்ள வேண்டாம். உடற்பயிற்சிக்கு அவையும் தேவை தான். ஆனால், அதைப் பற்றிச் சொன்னால் சோம்பேறிகளின் காதுகளில் அது நுழையுமா? நுழையாது. நான் சொல்ல வந்த உடற்பயிற்சி வேறு. அது, உன் வேலைகளையாவது நீயே செய் என்பது தான்.

அவரவர் வேலைகளை அவரவர் செய்வதன் மூலம் ஓர் உடற்பயிற்சி செய்து முடிகிறது. உன் வேலைகளை நீயே செய் என்பதற்குப் பிறரைக் கொண்டு செய்து கொள்ளாதே என்பது பொருள். அதிகாலையில் எழுந்திரு! உனது போர்வையை மடி! படுக்கையைத் தட்டிச்சுத்து! அதை இருக்குமிடத்திற்கு கொண்டு போய் வை! கிணறாக இருந்தால் நீரை நீயே இறைத்துக் குளி! குழாயாக இருந்தால் குளிக்கும் அறைக்கு நீரைக் கொண்டு போய்க்குளி! ஆறு, குளங்களானால் விரைந்து நடந்து செல்! உன் ஆடைகளை நீயே துவை! இல்லாவிடில் தலையைத் துவட்டிய துண்டையாவது நீயே கசக்கிக் காய வை! உனக்கு வேண்டியதை நீயே கசக்கிக் காய வை! உனக்கு வேண்டியதை நீயே போய் எடு! இவ்வாறு மனைவியையும், மக்களையும் அவரவர் வேலைகளைப் பிறர் துணையின்றிச் செய்யும்படி பழக்கு!



குறைந்த தூரத்தில் வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டுமானால் நடந்து செல்! பிள்ளைகளையும் விளையாட்டுக் காட்டி நடத்திச் செல்! எளிதில் தூக்கக் கூடியவைகளை நீயே எடுத்துப்போ! புகழுக்குப் 'போர்ட்டரை'க் கூப்பிடுவதையும், பெருமைக்கு வண்டி ஏறுவதையும் ஒழி! கைத் தடியை, தலைப்பாகையைத் தூக்க ஆள் கூப்பிடும் மக்களைக் கண்டு நகை! அது அவரவர் வேலைகளை அவரவர் செய்யத் துணை செய்யும்.

உன் வேலைகளை நீயே செய்வதால் உடல் வலுப்பெற்று உறுதியாகி வரும். கற்பனையல்ல முற்றும் உண்மை. இவ்வுண்மையை, வேலைக் காரர்களுக்குள்ள வலிவு, பசி, உறக்கம் ஆகிய இம் மூன்றும் வீட்டுக்காரர்களுக்கு இல்லாதிருப்பதிலிருந்தே நன்று அறியலாம்.

கட்டுரையின் கருத்தும், அதன் முடிவும் ஒன்றே ஒன்று; அது, உனக்கு நீயே வேலைக்காரனாக மாறு என்பது தான். உடற்பயிற்சி செய்யாத மக்கள் கூட தன் வேலைகளைத் தானே செய்வதன் மூலம் ஓர் உடற்பயிற்சியைச் செய்து விடமுடியும். இரண்டும் செய்யாத மக்கள் உடலைப் பெற்றிருக்கலாம்; ஆனால், அவர்களால் உடற் செல்வத்தைப் பெறமுடியாது. பிற செல்வங்களைத் தேடுமுன்னே உடற் செல்வத்தைத் தேடுங்கள். ஏனெனில் நோயற்ற வாழ்வு ஒன்றே குறைவற்ற செல்வமாகும்.

**– கி. ஆ. பெ. விசுவநாதம்**

## செயல்பாடுகள்

**ஒப்பிடுக**

கிராம மக்கள் நகரமக்கள் இவர்தம் உடல்நலப் பாதுகாப்பின் தன்மையை ஒப்பிடுக.

**விமர்சனம் எழுதுதல்**

உழைப்பு ஒன்றே உணவைச் செரிக்கச் செய்யும் மருந்து என்பதை விமர்சனம் செய்க.

**விளம்பரம் சேகரித்தல்**

உடற்செல்வம் பெற உடற் பயிற்சி தேவை. இது தொடர்பான விளம்பரங்களைச் சேகரிக்க. அவ்விளம்பரம் பற்றிய உங்கள் கருத்தைத் தொகுக்க.

**முத்திரை வாக்கியம் எழுதுதல்**

உடல்நலம் தொடர்பான முத்திரை வாக்கியங்கள் எழுதுக. முத்திரை வாக்கியங்களைத் தெளிவாக விளக்கும் வகையில் ஒரு நிகழ்ச்சிக் குறிப்பை எழுதுங்கள்

**கட்டுரை எழுதுதல்**

உடல் ஆரோக்கியம் தொடர்பான கவிதைகள், பழமொழிகளைச் சேகரியுங்கள். அவற்றின் கருத்துக்களின் அடிப்படையில் 'நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்' எனும் தலைப்பில் கட்டுரை தயாரிக்க.

# உயர்ந்த உள்ளம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை அறியாதார் எவருமே இல்லை. ஆனால், கொடிய நோய்கள் மனித சமூகத்தில் சிலரைத் தாக்கி அவர்களை நரக வேதனைக்குள்ளாக்கி விடுகின்றன. அத்தகைய நோயாளிகள், சமூகத்தில் நடைப்பிணமாக வாழ்கிறார்கள். நம் நாட்டில் தொழுநோயாளிகள் இங்ஙனம் வாழ்வதைக் காணலாம். இந்நிலையை மாற்ற முடியாதா? இந்த நோயைக் குணப்படுத்த முடியாதா? என்னும் கேள்விகள் நம்முன் எழுகின்றன.

ஒருமுறை நம் தேசத் தந்தை காந்தியடிகளை மருத்துவமனை ஒன்றைத் தொடங்கி வைக்க சிலர் அழைத்தார்கள். அப்போது அவர் அழைக்க வந்தவர்களிடம் நீங்கள் தொடங்க விரும்பும் அந்த மருத்துவமனை மூடுவிழாவுக்கு என்னை அழையுங்கள், அதை மூடிவைக்கிறேன்!என்றார். ஏன் அவ்வாறு சொன்னார் தெரியுமா? அது தொழுநோய் மருத்துவமனை திறப்பு விழாவாக இருந்தது. அந்த நோய் குறித்து காந்தியடிகளின் எண்ணம் இங்கே தெளிவாகத் தெரிகிறது. இந்த நோய் நம் நாட்டிலிருந்து முற்றிலும் அகற்றப்பட வேண்டும்; அதை அறவே அகற்ற எல்லோரும் முயற்சி எடுக்க வேண்டும் என்னும் அவரது உயர்ந்த உள்ளத்தை நாம் உணர்ந்து கொள்கிறோம்.

தொழுநோய் நம்நாட்டில் மக்கள் தொகையில் ஆயிரத்துக்கு ஐந்து பேரைப் பாதித்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. உலகிலுள்ள மொத்தம் தொழுநோயாளிகளில் இருபத்தைந்து சதவீதம் இந்தியாவில் உள்ளனர் என்பதை அறிந்து மனவேதனைப்படாமல் எந்த ஓர் இந்தியனாலும் இருக்க இயலாது. ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, கிழக்கிந்திய நாடுகள் முதலிய நாடுகளிலும் இந்நோய் காணப்படுகிறது.

இந்த நோயை இருவகையாகப் பிரிக்கலாம். பரவும் வகையொன்று; பரவாதவகை மற்றொன்று. எண்பது சதவீதம் பரவாத வகையைச் சார்ந்தது என்று ஆராய்ச்சிகளின் மூலம் தெளிவு செய்யப்பட்டுள்ளது. கி.பி. 1873– இல் நார்வே நாட்டு அறிவியல் ஆராய்ச்சியாளரான ஆர்மர் ஹான்சன் என்பவர் தொழுநோய் , மைக்கோ பாக்டீரியம் லெப்ரே என்ற நுண்கிருமிகளால்தான் பரவுகின்றது என்பதைக் கண்டறிந்தார்.

சாதாரண நோய்க்கிருமிகள் ஒரு தலைமுறை பெருக இருபது நிமிடங்கள் போதும். மாறாக தொழு நோயணுக்கள் பெருகுவதற்குக் குறைந்தது இரண்டு வாரங்களாவது வேண்டும். பல நோய் அணுக்களையும் சோதனைச்சாலையில் வளர்க்க இயலும். ஆனால், இந்த நோயணுக்களை உயிருள்ள விலங்குகளின் உடலில்தான் வளர்க்க இயலும். மேலும் இந்நோய் மனிதனை மட்டுமே பாதிக்கின்றது. தொழு நோயணுக்கள் தோலையும் நரம்பையும் தாக்குகின்றன. முதலில் சிறிய வெள்ளைப்பாடுகள் நம் தோலில் எங்கேயாவது தோன்றும். அவ்விடத்தில் எவ்விதமான ஊரலோ, எரிச்சலோ, நோவோ, இருக்காது. ஆகையால், பலரும் இதைக் கவனிக்காமல் இருந்துவிடுவர். இது நாளடைவில்

நரம்பையும் பாதித்து அவ்விடத்தை உணர்வில்லாமல் ஆக்கிவிடுகிறது. சிலநோயணுக்கள் அரிதாக எலும்பு, தசை போன்றவற்றைத் தாக்குகின்றன. இதனால் கால்களிலும் கைகளிலும் தசைகளுக்குப் பலம் குறைந்து தொடுணர்வு இல்லாமலாகிறது. அப்போதுதான் நோயின் அறிகுறியைக் கண்டு அறிய இயலுகிறது. சிலர் அப்போதும் கவனிக்காமல் இருந்துவிட்டு, ஊனம் ஏற்பட்ட பின்னர், மருத்துவரை நாடுகின்றனர். இந்நிலையிலும் மருத்துவத்தின் உதவியால் நோயைக் கட்டுப்படுத்த இயலும். உடல் ஊனத்தைக் கூட அறுவைச் சிகிச்சை மூலம் மாற்ற இயலும். எனவே, உடலில் வெள்ளைப்பாடுகள் தோன்றி அதில் தொடுவுணர்ச்சியும் குறைவதாக இருப்பின், உடனே மருத்துவரை நாட வேண்டும்.

தொழுநோய் உடையோரின் உடலில் பல இடங்களிலும்சிறிய பாடுகளோ, தடிப்புகளோ காணப்படும். அந்த நோய் தாக்கியவர்களை எளிதில் பிரித்தறிய இயலாது, ஆனால், அவர்கள் தோலில் ஏராளம் நுண்கிருமிகள் காணப்படும். தொழுநோய் எந்த வயதிலும் வர வாய்ப்புண்டு எனினும் பரவும் வகையைச் சேர்ந்த தொழுநோய் சாதாரணமாக வயதான ஆண்களிடையே காணப்படுகிறது. இந்நோயின் அறிகுறிகள் மிகவும் மெதுவாகவே வெளிப்படுகின்றன. சிறிது சிறிதாக உடலைத் தாக்கி, நோயாளி மரணத்துக்கு ஆளாகிறான்.

தொழுநோய் ஒட்டுவாரொட்டியென்று நம்பி வந்தனர். ஆனால், இதுவும் காற்றின் மூலம் தான் பரவுகிறதென்று தெளிவிக்கப்பட்டுவிட்டது. நோயாளி பேசும் போதும் தும்மும் போதும் இருமும் போதும் அவர்களின் தோல் மீது காணப்படும் புண்களிலிருந்தும் நோய்க்கிருமிகள் பரவுகின்றன. இக்கிருமிகள் பிற மனிதர்களைத் தாக்கி மெல்ல நோயைப் பரவச்செய்கின்றன. தோல் வழியாகத்தான் நோயணுக்கள் உடலினுள் நுழைகின்றன என்ற உண்மை எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும் நோயாளியோடு உறவு கொள்ளும் நபர்களில் அரிதாகச் சிலருக்கு மட்டுமே இந்நோயின் அறிகுறிகள் தென்படுகின்றன என்பதும் ஆராய்ந்தறிந்த உண்மையாகும். மேலும், பெரும்பான்மையோரும் இந்நோயை எதிர்க்கும் சக்தி பெற்றவர்களாக உள்ளனர் என்ற உண்மை நமக்கு மன அமைதியைத் தருகிறது.

இந்நோயை நம் நாட்டிலிருந்து முற்றிலும் அகற்ற இந்திய அரசாங்கம் பெருமுயற்சி எடுத்து வருகிறது. அதற்காகத் தொழுநோயை முற்றிலும் மாற்றும் தேசிய திட்டம் ஒன்றை உருவாக்கியது. தொழுநோயாளிகள் எல்லோரையும் கண்டுபிடித்துச் சிகிச்சை அளித்து வருகின்றனர். பரவும் வகையைச் சேர்ந்த தொழுநோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பது எவ்வளவு முக்கியமோ, அதுபோன்று அவர்களைத் தனிப்பட்ட இடத்தில் வசிக்கச் செய்வதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நோயைக் கட்டுப்படுத்த பல சமூக நலச்சங்கங்களும் செயல்படுகின்றன.

கிபி. 1940 – ஆம் ஆண்டுதான் தொழுநோய் கட்டுப்படுத்தும் ‘டாப்ஸோண்’ என்ற மருந்து முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மருந்தை ‘கோக்ரைன்’ என்னும் மருத்துவர் இந்தியாவில் சில தொழு

நோயாளிகளுக்குக் கொடுத்து அதன் சிறந்த பலனை அறிந்தார். மேலும் 'க்றோபாஸிமின்' 'றிபாம் பைஸின்' என்னும் மருந்துகள் நிலவில் வந்தன. இதில் 'றிபாம்பைஸின்' மிகவும் பலனளிப்பதாக உள்ளது. இவ்வாறு, இன்று இந்நோயை முற்றிலும் அகற்ற இயலும் என்ற திடமான நம்பிக்கை மக்களிடையே பரவி வருகிறது.

பொதுமக்கள் தொழுநோயாளிகளை அருவருப்பாகக் கருதலாகாது. இந்நோயாளிகளுக்கு ஏற்படும் தாழ்வு மனப்பான்மையையும், இந்நோயை சிகிற்சை செய்து மாற்ற இயலாதென்ற தவறான எண்ணத்தையும் மாற்றும் முறையில் நாம் அவர்களிடம் நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்குச் சமூகத்தில் மதிப்புடன் வாழ்வதற்கான ஏதேனும் ஒரு தொழில் அளிக்கப்பட வேண்டும். சாதாரண மக்களுக்குக் கிடைக்கும் வாழ்வு அவர்களுக்குக் கிடைக்கிறது என்னும் மனப்பான்மை ஏற்படச் செய்வதும் நம் கடமையாகும். இந்திய அரசாங்கம் பல திட்டங்களின் மூலம் மேற்கண்டவற்றை நடைமுறையில் கொண்டு வர தீவிர முயற்சி எடுத்து வருகிறது. நமது அரசு தொலைக்காட்சி மூலமும், வானொலி வழியாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும் பல சமூக நலச் சங்கங்களின் ஒத்துழைப்பாலும் இந்நோயைக் குறித்த உண்மைகளை பொதுமக்கள் புரிந்து கொள்ளச் செய்கின்றது.

பல்லாண்டுகளாக தொழுநோயாளிகள் மக்கள் சமூகத்தினரால் வெறுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, பெரிதும் அல்லலுக்குட்பட்டு வாழ்ந்தனர். ஆனால் இன்று அந்நிலை முற்றிலும் மாறிவிட்டது. கழிந்த நூற்றாண்டு வரை தொழுநோயாளிகள் கடவுளால் தண்டிக்கப்பட்டவர்கள் என்னும் கருத்து நிலவியது. அவர்களைப் பார்ப்பதும் பாவம் என்று எண்ணி வந்தார்கள். அந்நாளில் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதை ஆணித்தரமாகக் கொண்டு வாழ்ந்த செம்மல்களும் உண்டு. அவர்களுள் ஒருவரே தாமீன் அடிகள்.



தாமீன் அடிகள் கி.பி. 1840–ஆம் ஆண்டு பெல்ஜியம் நாட்டில் லொவாயின் பட்டணத்தில் பிறந்தார் இவர் இயேசு சபையில் தொண்டராகச் சேர்ந்து பணியாற்றி வந்தார். கிறிஸ்து மதத்தைப் பரப்ப கிழக்கிந்தியத் தீவுகளில் ஒன்றான ஹவாய் தீவுக்கு அனுப்பப்பட்டார். அங்கு அவர் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் உயரிய நோக்கத்தோடு தொண்டாற்றி வந்தார். ஹவாய்த் தீவில் கொடிய நோயான தொழுநோய் பரவலாயிற்று. தொழுநோயாளிகளை யெல்லாம் அங்கிருந்து மலாக்காய் தீவிற்குக் குடியேறச் செய்தனர்.

அருளுள்ளம் கொண்ட தாமீன் அடிகள் மலாக்காய்த் தீவில் தொழுநோயாளிகள் படும் இன்னல்களைக் கேள்வியுற்று அவர்களுக்குத் தொண்டாற்றத் துணிந்து அங்கு சென்றார்.

மலாக்காய்த் தீவில் நோய்ப்பிடித்தவர்களின் நிலை மிகவும் இரங்கத்தக்கதாக இருந்தது. அவர்களுள் பாதி அழுகிய காலினர் சிலர். அங்கை ஒழிய விரலழுகியவர் சிலர்; அங்கமெல்லாம் குறைந்தழுகியவர் பலர். இவ்வாறு சொல்லொணாத் துயரைத் தாங்கி அல்லற்படும் தொழுநோயாளிகளைக் கண்ட தாமீன் அடிகள் அவர்களுக்காகத் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் **ùLôÓdLf £jRUô] ôo. JqùY©Ú úSôV°Ù m,** "ஆண்டவனே தங்கள் ஆவியை எடுத்துக் கொள்ளலாகாதா? ஏன் இந்தச் சோதனை?" என்ற ஓலக் குரல் எழுப்பியவண்ணம் இருந்தனர். தாமீன் அடிகள் மனம் தளராது அவர்களுக்கு உதவியளித்து ஆறுதல் கூறி வந்தார். அவரே நோயாளிகளின் உடலைத் தூய்மை செய்து மருந்திட்டார். நோயாளிகளில் சிலரின் உதவியோடு சில வீடுகளைக் கட்டவும், குழாய் மூலம் குடிதண்ணீர் கொண்டு வரவும் செய்தார். இறந்து போனவர்களின் உடலைத் தாமே முன்னின்று மதச் சடங்குகளைச் செய்து அடக்கம் செய்தும் வந்தார்.

இவ்வாறு நோயாளிகளைச் சிகிற்சிக்கும் வேளையில் அவர்களின் குருதியும் எச்சிலும் அவர்மேல் தெறித்தாலும் அவர் சிறிதேனும் அருவருப்புக் கொண்டதேயில்லை. அவர் தன்னலத்தைச் சற்றும் சிந்திக்கவில்லை. தமக்கென ஒரு குடிசை கூட இல்லாமல் பல நாட்கள் மரத்தடியில் படுத்துறங்கினார். பின்னர் இடுகாட்டினருகில் ஒரு குடிசையமைத்து அதில் தங்கினார். அங்கு எவரும் சென்று தங்கலாம். அவர் படுக்கையில் கூட எவருக்கும் படுத்துறங்கலாம் என்னும் விதிகளை அவர் கடைப்பிடித்தார். தொழுநோயாளிகளுடன் சேர்ந்து உண்பார். தொழுநோயாளிகள் இவரைக் காணும் போது "தாயைக் கண்ட சேயைப் போல்" மகிழ்வர். இவர் ஆற்றிய தொண்டினால் நரகமாய் இருந்த மலாக்காய்த் தீவு நகரமாக இலங்கிற்று.

இவ்வாறு அயராது பிறர் நலம் காத்த அவ்வுத்தமரும் தொழுநோய்க்கு ஆளானார். எனினும் அதற்கு அவர் சற்றும் அஞ்சாமல் தன் பணியைத் தொடர்ந்து செய்து வந்தார். பலர் வற்புறுத்தியும் அத்தீவை விட்டுப் போக அவர் மறுத்தார். தொழுநோயாளிகளுக்குத் தொண்டு செய்து அவர்கள் இன்முகம் கண்டு வாழ்வதே பேரின்பம் எனக் கொண்டார். தாமீன் அடிகளது நோய் முற்றி, உடல் மெலிந்து, நடை தளர்ந்தது. 1889 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ஆம் நாள் அவர் இயற்கை எய்தினார். அன்று உலகமே கண்ணீர் விட்டழுதது. தாமீன் அடிகளைப் போன்று உயர்ந்த உள்ளத்துடன் தளராது அரும் பணியாற்றினால் இந்நோயை அறவே மாற்ற இயலும்; காந்தியடிகளின் உயர்ந்த எண்ணமும் ஈடேறும். அந்நாள் மலர்வதாக!

# செயல்பாடுகள்

**கலந்துரையாடலும் குறிப்பு எழுதுதலும்**

தொழுநோய் தோன்றுவதற்கான காரணமும், அதன் விளைவுகள் பற்றியும் கலந்துரையாடுங்கள், குறிப்பு எழுதுங்கள்

**விமர்சனக் குறிப்பெழுதுதல்**

என் கடன் பணி செய்து கிடப்பதே"
"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
"தாயைக் கண்ட சேயைப்போல"

மேற்கூறிய சொற்றொடர்களை ஆசிரியர் பயன்படுத்துவதற்கான காரணங்களைக் கண்டறிந்து விமர்சனக்குறிப்பு தயாரிக்க


**பேட்டி காணுதலும் கட்டுரை எழுதுதலும்**

தாமீன் அடிகள் போன்று தன் நலம் துறந்து பிறர் நலத்திற்காகச் சேவை செய்த பெரியோர்களிடம் பேட்டி காண்க. பேட்டியின் அடிப்படையில் அவரைப்பற்றி ஒரு சிறு வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை எழுதுக.

3

# மானுடம் வெல்லும்

## மரம் போல் வாழ்!



உண்ணக் கனி கொடுக்கும்
உறங்க நிழல் கொடுக்கும்
இலைகளும் பூக்களும்
மருந்தாய் விருந்தளிக்கும்

மழையை வருவிக்கும்
மண்ணைக் குளிர்விக்கும்
அறுத்துச் செதுக்கினால்
கதவாகி நிலையாகி
காவல் புரியும்

காற்றிலிருக்கும் மாசைக்
களைந்தெடுக்கும்
பாடும் பறவைகட்கு
வாழும் உறைவிடமாகும்

கிளைகளை வெட்டினால்
விறகாகும்
எரித்த சாம்பல்
உரமாகும்.



மனிதா ......... !
உன்னால் மற்றவர்
பெற்ற பயனென் கொல்?
உன் உற்றார் பெற்றோர்
மனைவி மக்களைத் தவிர .........!
உன்னையே , நீ எண்ணிப்பார்
உன் வாழ்க்கையை
மரத்திடமிருந்து தொடங்கு!

தன்னினத்தைத் தானே
அழித்துக் கொள்ளாதே
தங்களுக்குள் சாதிபார்த்து
சண்டையிட்டு கொள்ளாதே
தனக்கென எதையும்

சேர்த்து வைத்துக் கொள்ளாத
மரம் போல் வாழப் பழகு

இருக்கும் வரை எல்லார்க்கும்
பயனுடையவனாய் ............
இறந்த பின்னும் உன்
எண்ணங்கள் செயல்கள் மூலம்
எல்லார்க்கும் பயன்
கொடுப்பவனாய்

**- ச. ந. இளங்குமரன்**

## செயல்பாடுகள்

### பொருள் வேறுபாடு அறிதல்

மழை - மலை
களை - கலை
உறை - உரை
வாள் - வாழ்
அளி - அழி

மேற்காணும் சொற்களின் பொருள் வேறுபாடு அறியும் வகையில் வாக்கியம் அமைக்க.

### நயம் பாராட்டல்

இருக்கும் வரை எல்லார்க்கும்
பயனுடையவனாய் .............
இறந்த பின்னும் உன்
எண்ணங்கள் செயல்கள் மூலம்
எல்லார்க்கும் பயன்
கொடுப்பவனாய் ..........

என்ற கவிதை வரிகளில் அமைந்துள்ள நயத்தைப் பாராட்டுக.

### புதிய கவிதை எழுதுதல்

கவிதையின் சில சொற்களையோ தொடர்களையோ மாற்றிப் புதிய கவிதை படையுங்கள்; பொருத்தமான தலைப்பும் எழுதுக.

**கட்டுரை எழுதுதல்**

'மரம்போல் வாழ்' கவிதையின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதி அதற்கு உகந்த தலைப்பைத் தெரிவு செய்யுங்கள்.

**வாழ்க்கைக் குறிப்பு எழுதுதல்**

மரத்தைப் போன்று பிற உயிரினங்களிடத்தும் அன்பு பாராட்டி வாழ்ந்தவர்கள் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் அல்லவா? அவர்களுள் உங்களுக்குப் பிடித்த ஒருவருடைய வாழ்க்கைக் குறிப்பினை எழுதுங்கள்.

# அன்பு நெறிகள்


அன்பு என்பது மக்கட்கு மட்டும் உரிய உணர்வன்று. எல்லாவுயிர்க்கும் உயிராக விளங்கும் குணம் அன்பாகும். அதனாற்றான் 'அன்பின் வழியது உயிர்நிலை' என்று பொதுநோக்கிற் கூறினார் வள்ளுவர். அன்பு பொதுப் பெருஞ்சிறப்பினது - ஆதலின் 'அன்பெனப்பது ஒன்றின் தன்மை அமரரும் அறிந்ததில்லை' என்று கம்பர் அதன் தனித்தன்மையை அழுத்தமாகப் பாடினார். பறவை விலங்கு இனங்கட்கும் அன்பு வெளிப்பாடு உண்டு. மரஞ் செடி கொடிகட்கும் அன்புச் செயல் உண்டு. இவ்வுண்மை எங்குஞ் செயற்கையறிவும் செயற்கை மோகமும் உடைய இக்காலத்தவர்க்கும் எளிதிற் படாது. அகநானூற்றுக் காலம் இயற்கையறிவுக் காலம்.

**மான் குடும்பம்**

ஆண் மான், பெண் மான், குட்டிகள் என்ற ஒரு குடும்பம். கொலை வில்லை ஏந்திய வேட்டுவன் அம்பு தொடுத்தபோது பெண்மான் இறந்துவிட்டது. அந்த இறப்பைப் பொறாது துயருற்ற ஆண் மான் புல் மேயவில்லை; சிறிதும் நீர் பருகவில்லை; நடக்கவும் முடியவில்லை. தன்னுடலில் அம்பு தைத்ததுபோல மாழ்கி அந்த இடத்திலேயே சோர்ந்து கிடந்துவிட்டது, கைம்மைப்பட்ட இவ்வாண்மான் செத்திருக்கவும் செய்யும்; தான் காக்கவேண்டிய மறிக்குட்டிகள் இருப்பதை நினைந்து மடியவில்லை.

**யானைக்குடும்பம்**

ஒரு யானைக் குடும்பத்தின் அன்பு : ஆண் யானையாகிய களிறும் பெண் யானையாகிய பிடியும் உணவு தேடி மலைப்பக்கம் சென்றன. ஓரிடத்துச் சுரபுன்னையும் வாழையும் வளர்ந்தோங்கிய சாரல் இருந்தது. முதற்கண் அவற்றைத் தின்னச் சென்ற களிறு விரும்பித் தின்னும் மகிழ்ச்சியில் அறியாது அருகிருந்த படுகுழியிற் காலை வைத்து உள்ளே விழுந்துவிட்டது.



நேர் குத்தான ஆழ்குழியாதலின் ஏற முடியவில்லை. இல்லறக் காதலும் ஒட்பத்திறனும் வாய்ந்த பெண் யானை உடனே அடுத்திருந்த பெருமரக்கிளைகளை முறித்து, வருந்தும் தன் யானைக் கணவன் ஏறி வருவதற்குப் படிகள் அமைத்துக் கொடுத்தது. ஆண் யானையும் தப்பிப் பிழைத்துத் தன் காதற் பிடியொடு புறப்பட்டது. இந்த அகநானூற்றுச் செய்யுளில் வரும் காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன் என்று அப்பரடிகள் பாடினார்போலும்! பெண் யானை இத்தந்திரம் செய்திராவிட்டால் கானவர்கள் ஆண் யானையைப் பிடித்து அடிமைப் படுத்தியிருப்பார்கள். தற்காத்துத் தற்கொண்டானையும் காத்த சிறப்பு இந்தப் பிடிக்கு உண்டு. இந்த அன்பு நிகழ்ச்சியை,

> கழைநரல் சிலம்பின் ஆங்கண் வழையொடு
> வாழை யோங்கிய தாழ்கண் அசும்பில்
> படுகடுங் களிற்றின் வருத்தம் சொலியப்
> பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்


என்று நான்கு அடிகளில் பாடுவார் பெருங்குன்றூர் கிழார்.

### பறவையினம்

ஆய் எயினன் என்ற வீரன் பறவையினங்களை நன்கு வளர்த்துக் காப்பவன். அதனால் அவன்பால் எல்லாப் பறவைகளும் அன்பு காட்டின. பாழி என்ற போர்க்களத்தில் மிஞிலி என்பவன் ஆய் எயினனைக் கொன்றுவிட்டான். கொன்ற நேரம் கடுமையான நண்பகல், எயினனது சிதைந்த உடம்பு போர்க்களத்தில் வெயிலிற்கிடப்பதைக் காணப்பொறாத பருந்து முதலான பறவைகள் ஒருங்கு கூடித் தஞ்சிறகுகளையெல்லாம் மேலே குடையாகப் பரப்பிக் காதலன் உடலை வெயிலிற்படாமற் காத்தன. பகலிற் கண் தெரியாத கூகை தான் இந்தச் செய்ந்நன்றி நிகழ்ச்சியிற் கலந்துகொள்ள முடியவில்லையே என்று வருந்திற்றாம். பறவையினம் ஒரு மனிதனிடம் காட்டிய வியத்தகு அன்புச் செயலைப் பரணர் நான்கு பாடல்களில் பாராட்டுகின்றார். எனவே, அகநானூறு மக்களின் அன்பொன்றனையே பாடவில்லை; ஏனை யுயிர்களின் அன்பையும் பாடிப் பாராட்டுகின்றது. இதுவே சங்க இலக்கியத்தின் தனி மாண்பு.

### தலைவனும் வண்டும்

தலைவனும் வண்டும் பற்றிய ஒரு காட்சி: தலைவியைப் பிரிந்து நெடுந்தொலைவு சென்ற தலைவன் வினையை வெற்றியோடு முடித்துக் கொண்டு கார்காலத் தொடக்கத்தில் வீடு திரும்புகின்றான். வீடு நெருங்குகின்றது. மாலைப் பொழுதிற்குள் தலைவியைக் காண வேண்டும் என்று அவன் நெஞ்சு வேகப்படுகின்றது. மன வேகத்திற்கேற்பக் குதிரையும் வேகம். இத்தலைவன் வேகத்தேரில் வருகின்ற வழியே பெருஞ்சோலை;வண்டுகள் மலர்களோடு பிணைந்து கிடக்கின்றன. ஒரு சிந்தனை தலைவனுக்கு வருகின்றது. ஓடுகின்ற தேரில் கிண் கிண் என்று ஓசை செய்யும் மணியின் நாவினைக் கயிற்றாற் கட்டி ஓசையை அடக்குகின்றான். குதிரை பறக்கின்றது; ஆனால், மணியொலி யில்லை. ஏன் இவ்வாறு செய்தான்? வண்டுகளின் இன்பத்தைக் கலைக்கலாமா?



கெடுக்கலாமா? தொல்காப்பியர் கூறியபடி இவ்வுலகில் எல்லாவுயிர்க்கும் இன்பம் துய்க்கும் உரிமை யுண்டன்றோ? இந்தப்பொதுச் சிந்தனை தோன்றியதும் தலைவன் மணியின் நாவைக் கட்டினான். நாலறிவுடைய வண்டின் இன்பத்தை மதித்ததனால் இத்தலைவன் ஆறறிவுடைய மனிதன் ஆனான்.

"பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மாண்வினைத் தேரன்"

என்று குறுங்குடி மருதனார் இவன் செயலை 'மாண் வினை' என்று பாராட்டுகின்றார்.

### வேட்டுவனும் ஆண் பன்றியும்

வேட்டுவனும் ஆண் பன்றியும் எதிர்ப்பட்ட ஒரு காட்சி :

ஓர் ஆண் பன்றி தன் பெண் பன்றியோடும் குட்டிகளோடும் இரை தேடிப் புறப்பட்டது. அப்போது வேட்டுவன் ஒருவன் தன் வேட்டை நாயைப் பன்றிமேல் ஏவினான். ஆண் பன்றி அந்நாயைத் துரத்தி ஓட்டியது. மேலும் வேடுவர்கள்தன் மேல் வராமல் எதிர்த்து விலக்கியது. விலக்கியதோடு போய்விடாமல் தன் குட்டிகளையும் பன்றிப் பெண்ணையும் காவலான இடத்தில்

வைத்துவிட்டு வில் வேடுவன் வருகின்ற வழி பார்த்து அவனைத் தாக்குதற்காக அசையாது சினத்தோடு நின்றுகொண்டு இருந்தது. இவ்வீரக்காட்சியைக் கண்டான் வேடுவன். ஒரு சிந்தனை அவனுக்குப் புலப்பட்டது. அதுதான் மனிதச் சிந்தனை - அவ்வாண் பன்றியைக் கேவலம் பன்றியாக அவன் நினைக்கவில்லை. அதனைத் தன் தலைவனாகக் காண்கின்றான். வழி பார்த்து நிற்கும் அதன் எதிர்ச் செயலைத் தன் தலைவன் போர்க்களத்துப் பகைவர் படையை விலக்கித் தடுப்பதற்கு முன்னிற்பதாகக் காண்கிறான், வீர உணர்வு விலங்கிற்கு உண்டு என்று உணர்ந்தவுடனே பன்றியே, நீ என் தலைவனுக்கு ஒப்பாவாய் என்று பாராட்டிவிட்டுத் தொடுத்த அம்பை எடுத்துக் கொண்டு செல்கின்றான் என்று கபிலர் ஓர் அரிய நிகழ்ச்சியை வெளிப்படுத்துகின்றார்.

ஒரு மனிதன் தன் மனைவி மக்களைக் காக்க நினைக்கிறான். ஓர் ஆண் பன்றி தன் பெண்ணையும் குட்டிகளையும் காப்பாற்றும்பொருட்டு வீரங்கொள்கின்றது. இத்தற்காப்புச் செயலைத் தன் செயல்போல உணர்பவன்தானே மனிதன்? அத்தகைய அறிவுடை இரக்க மனிதர்களை அகநானூற்றில் நிறையக் காணலாம்.

**- முனைவர் வ. சுப. மாணிக்கம்**

# செயல்பாடுகள்

**கட்டுரை எழுதுதல்**

உலகில் வாழும் உயிரினங்கள் ஒன்றுக்கொன்று கொண்டுள்ள உறவையும், ஈடுபாட்டையும் அடிப்படையாகக் கொண்டே மானுடம் உருவாகிறது, என்ற கருத்தினை அணிசெய்யும் விதத்தில் உங்கள் பாடப்பகுதியிலிருந்து தக்க சான்றுகள் காட்டி தெளிவுறுத்துக.

- ♦ மனிதன், பறவை / விலங்கு இவைகளிடம் காட்டும் அன்பு
- ♦ பறவையினம் / விலங்கினம் மனிதனிடம் காட்டும் அன்பு

**அனுபவக்குறிப்பு எழுதுதல்**

நீங்கள் பறவைகள் / விலங்குகள் இவற்றினுடைய அன்பின் வெளிப்பாடுகளை உணர்ந்துள்ளீர்களா? உங்கள் அனுபவங்களைக் குறிப்பாக எழுதி வகுப்பறையில் வாசியுங்கள்.

**ஒப்பீடு செய்தல்**

உங்கள் பாடப்பகுதியில் வரும் அன்புச் செயல்களில் ஏதேனும் ஒன்றினை அன்புடைமை என்னும் அதிகாரத்தில் அமைந்த ஏதேனும் ஒரு குறட்பாவுடன் ஒப்பிடுக.

**திரட்டுக**

மானுடத்தை விளக்கும் இலக்கியப்பாடல்கள்/ கதைகள்/கட்டுரைகள்/ திரைப்படப்பாடல்கள். போன்றவற்றை நூலகங்களிலிருந்து திரட்டுங்கள்.

**அறிந்து கொள்வோம்**

| இலக்கியம் | மானுடச் செய்தி (அன்பின் வெளிப்பாடு) |
|---|---|
| ♦ புறநானூறு | ♦ பேகன் மயிலுக்குப் போர்வை ஈந்தது |
| ♦ புறநானூறு | ♦ பாரி முல்லைக்குத்தேர் ஈந்தது |
| ♦ ஆசிய ஜோதி | ♦ தேவதத்தனிடமிருந்து அன்னப் பறவையை மீட்டது. |
| ♦ கம்பராமாயணம் | ♦ ஜடாயு (பறவை), சுக்ரீவன்(விலங்கு) குகன் (வேடன்) போன்றவர்களிடம் இராமன் அன்பு காட்டியது |
| ♦ | ♦ |
| ♦ | ♦ |

# மனிதம்

ராமய்யங்காரை இப்போதும் நினைக்கின்றேன். அந்தி மயங்கும் நேரம். இடது ஆள்காட்டி விரலை தன் பெண் பிடித்துக்கொள்ள, வலது கையில் ஒரு அரிக்கேன் விளக்கைப் பிடித்துக்கொண்டு, மார்பில் பூணூல் அசைய கம்பீரமாய் எங்களை நோக்கி வந்ததை இப்போதும் நினைத்துப் பார்த்தேன்.

அவருடைய வரவு எங்களுக்கு, தாகவானுக்குத் தண்ணியைக் கண்டது போலிருந்தது.

நாங்கள் நடுக்காட்டில் அகப்பட்டுக்கொண்டோம். அந்தப் பிராந்தியத்தில் திருடர் பயம் ஜாஸ்தி ; வழிப்பறியும் கொலைகளும் சர்வ சாதாரணம்.

வேகமாய்ப் போய்க்கொண்டிருந்த எங்கள் காருக்கு என்ன சன்னி வந்ததோ; ஒருவேளை ராமய்யங்காரை நாங்கள் கண்டுசெல்ல வேண்டுமென்று நினைத்துத்தான் நின்றதோ. அவரைப்போல அன்பு நிறைந்த மனிதரை எப்போதாவது அபூர்வமாகத்தான் காணலாம்; பரிபூரண சூரியகிரஹணத்தை அடிக்கடி காணமுடியுமா?

என் மனைவியோ உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரைக்கும் நகைகளாய்ப் பூட்டித் தொங்கவிட்டிருந்தாள். மடியும் கனம். பயத்துக்கு கேட்கவேண்டுமா?

மேல்காற்று விர் விர் என்று தரையில் மோதி அடித்தது. ஒரே புழுதிப்படலம் . கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும் ஒரு மரம் செடி கூட இல்லை.

எங்கு பார்த்தாலும் ஒரே கறுப்பு மண்; வெந்துபோன ஈரலைப்போல் ஒரே கறுப்பு; என்ன பயங்கரம். இந்தப் பயங்கரமான சூழ்நிலைதான் இங்குள்ள மனிதர்களிடத்திலும் பயங்கர குணத்தைத் தோற்றுவித்திருக்குமோ?

டிரைவர் அவசர அவசரமாக ரிப்பேர் பார்த்துக்கொண்டிருந்தான். இருட்டு எங்களை நோக்கி மெள்ள மெள்ள தரை இறங்கி வந்தது. எங்களுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

எப்போவ் ! அதோ பாரு பூச்சாண்டி வருது
எங்கள் பையன்கள் காண்பித்த திசையில்,

அப்போதுதான் ராம அய்யங்கார், நான் முதலில் சொன்ன மாதிரி வந்துகொண்டிருநதார்.

கட்டுக்குடுமி, ஒரு அசைப்பில் பார்க்கும்போது மாறு கண்ணோ என்று தோன்றும் முட்டைக் கண்கள். நெருக்கமான அரிசிப் பற்கள். உடம்பின் அந்த நிறம் இருக்கிறதே அதை எதோடு ஒப்பிட? மஞ்சளா வெண்மையா, ரெத்தச் சிவப்பா? எதைச் சொல்ல?, உடம்பில் முகம் பார்க்கலாம்; அவ்வளவு பளபளப்பு;

கத்தி தேஜஸ், க்ஷவரம் செய்யப்படாமல் மயிர் முளைவிட்டிருப்பதுதான் எவ்வளவு அழகாகவும் பொருத்தமாகவும் இருக்கிறது; நாமும் இருக்கிறோமே மழுமழுவென்று முகத்தை வழித்துக் கொண்டு. அவர் பட்டத்தார் வைத்துக்கட்டி இருக்கும் மாதிரியும் அந்த வேஷ்டியின் நிறத்தையும் நீங்கள் கட்டாயம் பார்க்கவேண்டும்;

சிவந்த கீற்று உதடுகள் புன்சிரிக்க எம்மை நோக்கி நெருங்கி வந்தார். குரல் இனிமையால் முதலில் என்ன சொன்னார் என்று விளங்கவில்லை.

"கார் ரிப்பேரா?..."

"அந்தி வேளையில் இப்படித் தனியாக இந்த இடத்தில் நிற்க வேண்டாம்; நம் வீட்டிற்குப் போகலாம்; வாருங்கள்..."

மனைவி என் முகத்தை நோக்க நான் அவள் முகத்தை நோக்க, எங்கள் பையனோ ராமய்யங்காரின் மகளை நோக்கிச் சிரித்துக் கொண்டிருந்தான்.

யார் இந்தப் பிராமணன்; கடவுளா, திருடனா? என் மனைவி ராமய்யங்காரின் பெண்ணைக் குரோதத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்தப் பெண் தான் எவ்வளவு அழகாக இருந்தாள். குழந்தையே இப்படி இருந்தால் தாய் எப்படி இருப்பாளோ...

டிரைவருக்கு லைட் தேவையாக இருந்தது. அறிந்த ராமய்யங்கார் அதை டிரைவரிடம் கொடுத்தார். அவன் வேலையில் மூழ்கினான்.

"உங்கள் வீடு எங்கே..."

"அதோ; அதோ தெரிகிறது பாருங்கள். வீடும் கடையும் ஒன்றுதான்".

"கடையா; என்ன கடை? ..."

"காப்பிக்கடைதான்; ஒத்தக்கடை என்று சொல்லுவார்கள். கடையில விற்கிறது காரியம் இல்லை. கால்நடையாய் போவோர் வருவோர்களுக்கு தாகத்துக்குத் தண்ணீர் கொடுத்து உதவுகிறேன். அதுதான் நான் செய்கிறதெல்லாம்" நான் அவரைப் பார்த்தேன். உயர்ந்த மனிதனாகத் தோன்றினார் எனக்கு. அவர் எதையோ பார்த்துக் கொண்டிருந்தார். குறி இல்லாத பார்வை.

"குழந்தை! உன் பேர் என்ன?"

"மாமா கேட்கிறார்; பதில் சொல்லு"

"நந்தினி"

'நந்தினி... பெயரும் அழகாக இருக்கிறது'

குழந்தைகள் இருவரும் நண்பர்களாகிவிட்டார்கள் அதற்குள். பெரியவர்கள் ஏன் இப்படி ஒட்டமாட்டேன் என்கிறார்கள்?

'சூனியம்; சூனியம் பிடித்த கழுதைகள்!'

பேசிக்கொண்டே நடந்தோம். குழந்தைகள் கைகோர்த்துக் கொண்டு முன்பாக ஓடினார்கள். என் மனைவி எங்களைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தாள். எதுவும் யாருடனும் பேசவில்லை அவள்.

கடைவாசலுக்கு முன் போட்டிருந்த பலகையிலேயே உட்கார்ந்து கொண்டு விட்டாள் என் மனைவி. முகச்சுளிப்புடன் வாயைக் குவித்து உள்ளுக்கமைந்த காற்றை உஸ் என்ற சத்தத்துடன் வெளியேற்றினாள். அவளை எப்படி உள்ளே போகச் சொல்ல என்று தெரியாமல் திகைத்தார் ராமய்யங்கார். உள்ளிருந்து ஒரு வயதான அம்மா வந்து இவளை உள்ளே வாருங்கள் என்றார். முகஜாடையால் அது ராமய்யங்காரின் தாயார் தான் என்று நன்றாகத் தெரிந்தது.
இவளோ அசைகிறதாகக் காணோம்.

குழந்தைகள் இருவரும் உள்ளே இருந்தார்கள். இப்போது ராமய்யங்காரின் மனைவி - மனைவியாகத்தான் இருக்க வேண்டும்; நந்தினியின் முகஜாடையாலும் அழகின் பெருக்கத்தாலும் தெரியவில்லையா?

"மாமி! உள்ளே வாருங்களேன்"
இந்தக் குரலின் வேண்டுதலுக்குமுன் நிற்கும் சக்தி உலகத்தில் யாருக்கு உண்டு! ஒரு குடும்பத்துக்கு இப்படிக் கச்சிதமான ஒரு சின்ன வீடு போதுமே.

கம்மந்தட்டையால் அழகாக வேயப்பட்டிருந்தது. மண்தரை, சாணி மெழுக்கு; சுத்தம் லக்ஷ்மீகரம்.

நாங்களும் உள்ளே போனோம்.

எங்கள் பையனுக்கு முன்னால் நந்தினி உட்கார்ந்து ஒரு தாள் பையைத் தலைகீழாக தட்டிக் கொண்டிருந்தாள். அதிலிருந்து பொடிப்பொடி சிலேட்டுக் குச்சிகள் ஒரு மூன்றாவது இருக்கும் ; நாலைந்து சாக்பீஸ் துண்டுகள் இரண்டு மூன்று தீப்பெட்டிப் படங்கள், ஒரு தீப்பெட்டி, மடித்துவைத்த ஒரு டிராமா நோட்டீஸ் இவ்வளவும் விழுந்து குவிந்தது. ராமய்யங்காரும் மற்றவர்களும் சிரித்தார்கள். குழந்தைகள் மிரண்டு எங்களை நோக்கின.

பையன் சிணுங்கிக் கொண்டே வந்து அவன் அம்மாவின் முந்தானையைப் பற்றிக் கொண்டான். ராமய்யங்கார் அவனுக்கு பட்க்ஷணமும் காப்பியும் கொடுத்தார். அதற்கான துட்டை எடுத்துக் கொடுக்க மணிபர்ஸில் கை போவதற்குமுன் ராமய்யங்காரின் கைகள் என் கைகளைப் பிடித்துக் கொண்டன.

"பரவாயில்லை"

எனக்குச் சங்கடமாய்ப் போய்விட்டது. என்ன செய்வதென்றே தெரியவில்லை.

உள்ளே நகைகளைப் பற்றி சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது. ராமய்யங்கார் வெத்திலைச் செல்லத்தை என்பக்கம் தள்ளி, தான் வெற்றிலை போட ஆரம்பித்தார்.

பார்த்துக்கொண்டே இருந்த எனக்கும் போடுவோமா என்ற ஆசையால் செல்லத்தின் பக்கம் கையை நீட்டினேன். ராமய்யங்கார் தடுத்துவிட்டார்.

“வேண்டாம்... பழக்கமில்லையென்றால் வேண்டாம்”.

எனக்கு இப்படி ஒரு அண்ணா இருந்தால் தேவலை என்று பட்டது. நந்தினியைக் கண்டிக்கும் போதெல்லாம் அவர், அபிஷ்ட்டு அபிஷ்ட்டு என்று சொல்லுவார்.

இந்த வார்த்தையை நாங்கள் இதுவரை கேள்விப்படாததால் எங்களுக்கு அது வேடிக்கையாக இருந்தது. என் மனதிற்குள்ளேயே பல தடவை அப்படிச் சொல்லிப் பார்த்துக் கொண்டேன். அதற்கு என்ன அர்த்தமோ எங்களுக்குத் தெரியாது!

“ஒரு நாளைக்கு எவ்வளவு விற்பனையாகும்?”

“ஏழு ரூபாயிலிருந்து எட்டு ரூபாய் வரை; சில நாளைக்கு பத்திலிருந்து பன்னிரெண்டுமாகும்”.

“கடன் நிறைய போகுமா?”

“இல்லை; வேண்டுமென்றே கொடுக்கிறதில்லை என்று வைத்திருக்கிறேன்”. நான் எதோ சொல்ல வாய் திறப்பதற்குள் ராமய்யங்கார் தொடர்ந்து,

“...இதில் அபவாதத்திற்கு என்ன இருக்கப்போகிறது?”

இந்த மூடஜனங்களுக்கு மத்தியில் எப்படி கறாராக இருக்க முடிகிறது இவரால்! ஆச்சரியமாக இருந்தது எனக்கு. ஓசிப்பதினி விடவில்லை என்பதற்காக ஒரு பனைஏறியின் மரங்கள் எல்லாவற்றிலுமுள்ள முட்டிகளை உடைத்து, பாளையையும் வெட்டி எறிந்த ஜனங்கள் இவர்கள். இதை அவரிடம் சொன்னபோது அலட்சியமான சிரிப்புடன்,

நாம் பரிசுத்தமாக இருந்து கொண்டால் எதுவும் நம்மிடம் வராது; எதுவும் ஒன்றும் செய்யாது.

நம்பிக்கையில் தான் எவ்வளவு அழுத்தம்!

ரிப்பேர் முடிந்துவிட்டதென்று சொல்லி டிரைவர் கூப்பிட வந்து விட்டான். நாங்கள் பிரியவேண்டிய நேரம் வந்துவிட்டது. விடை பெற்றுக்கொள்ள ஆரம்பித்தோம்.

குங்குமம், பழம், வெற்றிலை முதலியன என் மனைவிக்குக் கொடுத்தார்கள். சுமங்கல்யத்திற்குச் செய்யும் இந்த மரியாதை உள்ளத்தைக் கவர்ந்தது. அரியதான இவர்கள் பண்பாட்டை எண்ணி வியந்தேன்.

புறப்படும் போது ராமய்யங்கார் என் கைகளைப் பற்றி, "சௌக்கியமாகப் போய்வாருங்கள்". வரும்போது இந்த ஏழையின் குடிசையில் தங்கிப்போக வேணும் என்றார்.

அவருடைய கைவிரல்கள் அல்லித்தண்டுபோல் ஜில் என்று இருந்தது. வணங்கிப் புறப்பட்டோம். உள்ளம் ஆனந்தத்தால் தத்தளித்தது. பயணத்தின் மூன்று நாளும் எங்களுக்கு சதா இவர்களைப் பற்றிய பேச்சுத்தான்.

பிரயாணம் முடிந்த மூன்றாவது நாள் திரும்பும் போது ராமய்யங்காருக்கு, பச்சைப் பாக்கும் தளிர் வெற்றிலையும் வாங்கிக் கொண்டோம்; நந்தினிக்கு சண்பகப்பூவும் பழங்களும் வாங்கிக் கொண்டோம்.

கயத்தாறை அடுத்து வரும் போது மேல்காற்று வந்துவிட்டது. இன்னும் கொஞ்சநேரத்தில் ராமய்யங்காரைப் பார்த்துவிடுவோம் என்ற சந்தோஷம் எனக்கு. எங்கள் பையன் பூவையும் பழங்களையும் கையில் எடுத்துக் கொண்டான். என் மனைவி மாத்திரம் உம்மென்று இருந்தாள்.

அதே சாயங்கால நேரம். டிரைவர் காரை நிறுத்திவிட்டு எங்களைப் பார்த்தான். எனக்கு விளங்கவில்லை.

"அந்தக் கடையைக் காணலையே?"
வேகமாக அடித்த என் நெஞ்சின் சப்தம் எனக்கே கேட்டது.
இது என்ன; இது என்ன அநியாயம்?

எங்கள் பக்கத்தில் நின்றிருந்தது நான்கு கருகிப்போன மண் சுவர்கள்! படாரென்று காரின் கதவைத் திறந்து இறங்கினேன். காற்று ஓவென்று இரைந்தது விஷ்ஷ் என்று சீட்டி அடித்தது. சில சமயம் கெக்கலி கொட்டி நகைத்தது. காற்றின் எதிர்ப்புறம் சாய்ந்து நடந்து முன்னேறினேன்.

'ஆமாம்; இது ராமய்யங்கார் வசித்த வீடுதான்';
என் முகத்தில் சாம்பல் வீசி அடித்தது.
உள்ளம் விசித்தது.
"ராமய்யங்கார்; ராமய்யங்கார்" என்று உரக்கக் கூவவேண்டும் போல் இருந்தது.
காரின் பக்கம் வந்து சேர்ந்து நின்றேன்.
"நந்தினி, அவர்கள் எல்லாம் எங்கேப்பா காணோம்?"

தூரத்தில் ஆட்டு இடையர்கள் பாடும் குரல் கேட்டது. கைகளைக் குவித்து வாயருகே வைத்து நானும் டிரைவரும் சத்தம் கொடுத்து அவர்களைக் கூப்பிட்டோம். மேல்துண்டை வீசி அவர்களை வரும்படி ஜாடை செய்தோம்.

இரண்டு பையன்கள் ஓடிவந்தார்கள்.

“இங்கே ஒரு ஐயர் கடை வைத்திருந்தாரே… எங்கே காணோம்? ஏன் இந்தக் கடை இப்படி இருக்கிறது?” என்று கேட்டோம்.

“அய்யோ பாவம்; அந்தக் கண்ராவியை ஏன் கேட்கிறீர்கள்; அவர் உயிர் பிழைத்ததே பெரிய காரியம்”.

“பாவிப்பயல்; எவனோ அவர் கடைக்குத் தீ வைத்துவிட்டான்”.
“தீ வைத்துவிட்டானா; எதுக்காக?”

“எதுக்காக வச்சானோ; அவன் விளங்கமாட்டான்…. பாவம், அவர்கள் கட்டின வேட்டி துணிகளோடதான் வெளியே வரமுடிஞ்சது. அந்த வயசான ஆச்சியம்மா வீட்டுக்குள்ளாரே மயக்கம் போட்டு விழுந்திருச்சாம். அந்த அய்யருதான் அந்த அம்மாவையும் தோளில் தூக்கிப் போட்டுக்கிட்டு வெளியே வந்தாராம். உயிர் பிழைச்சதே பெரிய காரியம்.

நிற்கவே முடியவில்லை. காரினுள் வந்து உட்கார்ந்தேன். நாங்கள் பேசிக்கொண்டதின் அர்த்தம் ஒன்றுமே எங்கள் பையனுக்கு விளங்கவில்லை என்பது அவனுடைய பீதி நிறைந்த முகம் காட்டியது. அவன் தன் தாயின் முந்தானையை பலமாகப் பற்றிக் கொண்டிருந்தான். அவன் காலடியில் பழங்களும் பூக்களும் சிதறிக் கிடந்தன.

டிரைவர் காரின் கதவுகளை அறைந்து சாத்தினான். நான் என் மனைவியைக் கவனித்தேன். அந்தக் கறுப்பு முகத்திலிருந்து ஒன்றையும் அறிந்து கொள்ள முடியவில்லை.

**– கி. ராஜ நாராயணன்**

# செயல்பாடுகள்

**கருத்து எழுதுதல்**

“எங்கு பார்த்தாலும் ஒரே கறுப்பு மண்; வெந்து போன ஈரலைப் போல் ஒரே கறுப்பு! என்ன பயங்கரம்! இந்தப் பயங்கரமான சூழ்நிலை தான் இங்குள்ள மனிதர்களிடத்தில் பயங்கரக் குணத்தைத் தோற்றுவித்திருக்குமோ?” – எந்த நிகழ்ச்சியை நினைத்து ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்? உங்கள் கருத்தை எழுதுங்கள்.

**விமர்சனக் கட்டுரை எழுதுதல்**

'மனிதம்' என்ற சிறுகதையைப் படித்து அக்கதையின் கரு, மொழிநடை, பாத்திரப்படைப்பு, உத்தி போன்றவற்றை ஆராய்ந்து விமர்சனக் கட்டுரை எழுதுக.

**வாக்கியம் அமைத்தல்**

'தாகவானுக்குத் தண்ணியைக் கண்டது போல' போன்ற உவமைத் தொடர்களைக் கதையிலிருந்து தேர்ந்தெடுத்து, அத்தொடர்களைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைக்க.

- அல்லித் தண்டுபோல
-
-
-

**கதை உருவாக்கல்**

மனித நேயத்தை மையப்படுத்தி ஒரு கதை எழுதுக.

# அருஞ்சொற்பொருள் அகராதி

## அ

| | | |
|---|---|---|
| அங்கை | - | உள்ளங்கை |
| அசும்பு | - | அசைவு |
| அயிரை | - | ஒரு வகை மீன் |
| அரிதாரம் | - | கஸ்தூரி மஞ்சள் |
| அருகு | - | பக்கம், சமீபம், ஓரம் |
| அல்லல் | - | துன்பம் |
| அலக்குதல் | - | துணி துவைத்தல் |
| அவஸ்தை | - | நிலைமை |

## ஆ

| | | |
|---|---|---|
| ஆர்ப்ப | - | ஒலிக்க |
| ஆல | - | ஒலிக்க |
| ஆழி | - | கடல் |
| ஆறாட்டு | - | நீராட்டு |

## இ

| | | |
|---|---|---|
| இக்காலை | - | இவ்வேளை |

## ஈ

| | | |
|---|---|---|
| ஈகை | - | கொடை |

## உ

| | | |
|---|---|---|
| உண்டி | - | உணவு, இரை |
| உழப்பது | - | முயற்சிப்பது |

## ஊ

| | | |
|---|---|---|
| ஊழி | - | பழமை, நெடுங்காலம், யுகம் |

## ஏ

| | | |
|---|---|---|
| ஏவலர் | – | வேலைக்காரர் |

## ஐ

| | | |
|---|---|---|
| ஐயம் | – | சந்தேகம் |

## ஒ

| | | |
|---|---|---|
| ஒட்டுவாரொட்டி | – | தொற்றுநோய் |
| ஒட்பம் | – | அறிவு, அழகு, ஒளி |
| ஒல்கி | – | குழைந்து, ஒதுங்கி |

## ஓ

| | | |
|---|---|---|
| ஓதை | – | ஓசை |
| ஓம்புதல் | – | பேணுதல், பாதுகாப்பு, வளர்த்தல் |

## க

| | | |
|---|---|---|
| கடவு | – | துறை |
| கம்மந்தட்டை | – | கம்பு என்ற தானிய வகையின் தண்டுப்பகுதி |
| கயல் | – | கயல் மீன், |
| கயல் கண் | – | கயல் போன்ற கண்கள் |
| கருவூலம் | – | களஞ்சியம், பொக்கிஷம் |
| கழை | – | மூங்கில் |
| களிறு | – | ஆண்யானை |
| கஜானா | – | களஞ்சியம், நிதிச்சாலை |
| காமர் | – | அழகு, விருப்பம், காம இச்சை மிகுந்தவர் |
| காவா | – | காவாத, காக்காத, |
| கானவர் | – | வேட்டுவர் |
| கிளை | – | சுற்றத்தார், மரக்கம்பு |
| குஞ்சி | – | குடுமி, தலை |
| கூவம் | – | கூவம் நதி |
| கெக்களி | – | கேலியாக எழுப்பிய ஒலி |
| கெழுமிய | – | சிறந்த |
| கேளிர் | – | சுற்றம் |

| | | |
|---|---|---|
| கைம்மை | – | விதவை, இழிநிலை, |
| கோடு | – | மலைச்சிகரம், பக்கம், விலங்கின் கொம்பு, மரக்கொம்பு, பிறைச்சந்திரன் |

## ச

| | | |
|---|---|---|
| சிலம்பு | – | பக்கமலை |
| சீலம் | – | நல்லொழுக்கம், இயல்பு, நல்லுணர்வு |
| சுமங்கல்யம் | – | மங்கலம் |
| சூனியம் | – | வெற்றிடம் |
| செரித்தல் | – | ஜீரணித்தல் |
| சோணாடு | – | சோழநாடு |

## த

| | | |
|---|---|---|
| தகைசான்ற | – | பொருத்தமான, ஒப்பான, பெருமையான |
| தண் | – | குளிர்ச்சி |
| திருந்து | – | செவ்வியுடைய |
| திலகம் | – | பொட்டு |
| தொழுநோய் | – | குஷ்டநோய் |

## ந

| | | |
|---|---|---|
| நரல் | – | ஒலி |
| நாமம் | – | அச்சம் |
| நியோகம் | – | நல்வாய்ப்பு |

## ப

| | | |
|---|---|---|
| பதம் | – | ஈரம், பக்குவம் |
| பூசல் | – | வருத்தம் |
| பூவர் | – | பூக்கள் நிறைந்த |
| பெருக்கு | – | வெள்ளம், மிகுதி, கடல் நீரேற்றம் |
| பெருந்தகை | – | பெருந்தன்மை, பெருந்தன்மையுள்ளவன் |
| பொங்கர் | – | மரக்கொம்பு, சோலை, |

## ம

| | | |
|---|---|---|
| மணி | – | அழகு |
| மதகு | – | மடை |
| மருங்கு | – | பக்கம் |
| மழவர் | – | வீரர் |
| மறிக்குட்டி | – | மான்குட்டி, ஆட்டுக்குட்டி |
| மாசு | – | குற்றம், தூசி |
| மாழ்கி | – | மயங்கி, சோம்பி |
| முட்டி | – | மோதி |

## வ

| | | |
|---|---|---|
| வதிந்த | – | தங்கிய, துயின்ற |
| வழை | – | சுரபுன்னை |
| வாய் | – | வாயில், அரண்மனை வாயில் |
| வார்த்த | – | நீண்ட |
| விழவர் | – | உற்சவம் கொண்டாடுபவர் |
| வெய்யோன் | – | சூரியன் |

## ஸ

| | | |
|---|---|---|
| ஸ்படிகம் | – | பளிங்கு |